அச்சிடல் முறைமை மற்றும் விநியோக முறைமை முற்றிலும் முழுமையான சுகாதார பாதுகாப்புத்தன்மை கொண்டது.

பிரத்தியேகமான விசேட கிருமி எதிர்ப்புத் தன்மை கொண்ட இரசாயன கலவை மற்றும் இயற்கை மூலிகைகளால் தயாரிக்கப்பட்ட நறுமணம் மிக்க சிறப்பு நிறப்பூச்சைக் (பெயின்ட்) கொண்டு நமது பத்திரிகை அச்சிடப்படுகின்றது என்பதை வாசகர்கள் அனைவருக்கும் அன்புடன் அறியத்தருகின்றோம்.

Follow us:

# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்




மலர் : 01, இதழ் : 15 சார்வரி வருடம், ஆனி மாதம் 29ஆம் திகதி திங்கட்கிழமை (13.07.2020) ஹிஜ்ரி - 1441 துல்கஹ்தா பிறை-21, 0115886187 பக்கங்கள் 12

விலை ரூ.20

# கொரோனா பரவல் உச்சத்தில்; புலனாய்வுத்துறை எச்சரிக்கை!

## கோட்டா - மஹிந்த பொது இடங்களுக்கு செல்வதை நிறுத்தினர்

## இதர அரசியல் கட்சித் தலைவர்களுக்கும் விசேட எச்சரிக்கை

## பொதுஜன பெரமுனவின் பிரசாரக் கூட்டங்களும் ஒத்திவைப்பு

கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்திலிருந்து கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானோர் நாட்டின் நாலாபுறமும் சென்றிருப்பதால் அவர்களை அடையாளம் காணும் செயற்பாடுகளுக்கு அரச புலனாய்வுத்துறை சுகாதார அமைச்சுக்கு ஒத்துழைப்பை வழங்கி வருகிறது.

அதேசமயம், பொது இடங்களுக்கு செல்வதை தவிர்க்குமாறு அரச புலனாய்வுத்துறை அனைத்து அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கும் விடுத்த எச்சரிக்கையையடுத்து, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் பொது இடங்களுக்கு செல்வதையும், தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் கலந்துகொள்வதையும் நிறுத்திவிட்டனர். மேலும் பல கட்சித் தலைவர்களும் பொது இடங்களுக்கு செல்வதை தவிர்க்க முடிவு செய்துள்ளனர்.

இதேவேளை, தேர்தல் பிரசாரக் கூட்டங்களை சில தினங்களுக்கு இடைநிறுத்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தீர்மானித்துள்ளது. இது தொடர்பில் அக்கட்சி விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உள்ளிட்ட ஸ்ரீலங்கா சுதந்திர பொதுஜன அமைப்பினால் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த சகல பிரசாரக் கூட்டங்களையும் தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர், தேசிய ஒருங்கிணைப்பாளர் பசில் ராஜபக்ஷ ஆகியோர் அந்தக் கட்சிக்கு ஆலோசனை வழங்கியுள்ளனர்.

02

## பொது விடுமுறையா மறுத்தது அரசு!

அரச விடுமுறை அறிவிக்கப்படவிருப்பதாக தெரிவிக்கப்படும் தகவல்களில் எந்தவித உண்மையும் இல்லை என்று அரசாங்க தகவல் திணைக்கள பணிப்பாளர்...

02

## வைரங்கள் பதிக்கப்பட்ட முகக்கவசம் இந்தியாவில் விற்பனைக்கு வந்தது!




கொரோனா வைரஸ் பரவலுக்கு மத்தியில், இந்தியாவின் குஜராத்தில் உள்ள ஒரு நகைக் கடையில், வைரங்கள் பதிக்கப்பட்ட முகக் கவசங்கள்...

02

## செவ்வாய்க்கு செல்ல வெள்ளி முக்கியம்

### வானியல் விஞ்ஞானிகள் பரிந்துரை



செவ்வாய் கிரகத்துக்கு மனிதர்களை குடியேற்றும் திட்டம் வெற்றி பெற வேண்டுமெனில், வெள்ளி கிரகம் வழியாக செல்வதே...

02

## ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு அம்பாறையில் நேரடி ஆய்வு

### சஹ்ரான் குழு குறித்து விசாரணை

பாறுக் ஷிஹான்

உயிர்த்த ஞாயிறு தினத் தற்கொலை தாக்குதல்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு உறுப்பினர்கள் அம்பாறை மாவட்டத்தின் பல...

02

அச்சிடல் முறைமை மற்றும் விநியோக முறைமை முற்றிலும் சுகாதார தன்மைமிக்கது. 'தமிழன்' பத்திரிகை உங்கள் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தியே தினமும் உங்களை வந்தடைகிறது.

## 'கொரோனா' வைரஸ் தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் சாத்தியம்!

### அவதானமாக இருக்குமாறு மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

நா. தினுஷா

கொரோனா நோய்த்தொற்று தொடர்பான விழிப்புணர்வுத்தன்மை சமூகத்தில் குறைவடைந்துள்ளதாகவும் இந்நோய்த்தொற்றின் தற்போதைய நிலைமைகளிலிருந்து பாதுகாப்பு பெறவேண்டுமாயின், சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள சுய சுகாதார பாதுகாப்புச் செயற்பாடுகளை பின்பற்றி மிக அவதானமாக இருக்குமாறும் அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை, கொரோனா நோய்த்தொற்றை தடுப்பதற்கான திட்டங்களை சுகாதார அமைச்சு முறையாக நடைமுறைப்படுத்த வேண்டுமென்றும்....

02

## பாடசாலைகளுக்கு இன்று முதல் விடுமுறை




### கல்வியமைச்சு நேற்றிரவு அவசர அறிவிப்பு

கொரோனா வைரஸ் பரவல் சம்பந்தமாக சமூக ஊடகங்களில் வெளிவரும் சில தவறான தகவல்கள் காரணமாக பெற்றோரும் மாணவர்களும் ஆசிரியர்களும் அதிபர்களும் அச்சமுற்றுள்ள நிலைமை ஏற்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதனால், அவர்களின் அச்சத்தை போக்கும் வகையிலும் மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் ரீதியிலும் விடுமுறை திட்டமொன்றை அறிவிக்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. இதன்படி , இன்று முதல், எதிர்வரும் வெள்ளிக்கிழமை 17ஆம் திகதி வரை அனைத்து பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்படுவதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. தனியார் பாடசாலைகள், சர்வதேச பாடசாலைகள், பிரத்தியேக வகுப்புகள்...

02

## மேஜர் ஜெனரல் ஒருவர் உட்பட 41 கேர்ணல்மார் தனிமைப்படுத்தலில்

### கந்தக்காட்டில் ஆரம்பித்த கொரோனா ஓயாத அலைகள் - 2

நீர்கொழும்பு செய்தியாளர் செல்வா

கந்தக்காடு புனர்வாழ்வு முகாமிலிருந்து பரவிய கொரோனா வைரஸ் பலருக்கும் தொற்றியுள்ளதால் ஏராளமானோர் தனிமைப்படுத்தப்பட்டு வருகின்றனர்.

புனர்வாழ்வு முகாமில் பயிற்சிகளை வழங்கிய கேர்ணல் ஒருவருக்கு கொரோனா தொற்று இருப்பது கண்டறியப்பட்டதையடுத்து, அவருடன் நெருக்கமாக பழகிய மேஜர் ஜெனரல் ஒருவர் உட்பட 41 கேர்ணல்மார் தனிமைப்படுத்தப்பட்டனர்.

தனிமைப்படுத்தப்பட்ட மேஜர் ஜெனரல் இலங்கை இராணுவத்தின் பயிற்சிப் பிரிவுகளுக்கான பணிப்பாளர் என்று சொல்லப்பட்டது. கந்தக்காடு முகாம் பயிற்சி வழங்கிய கேர்ணலுடன் இவர் பழகியதால் தனிமைப்படுத்தப்பட்டார். இந்த இராணுவ அதிகாரிகளின் குடும்பங்கள் அவரவர் வீடுகளில் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டனர்.

**-கண்டியிலும் தனிமைப்படுத்தல் செயற்பாடுகள்-**

கந்தக்காடு முகாமில் சேவையாற்றிய கண்டி, குண்டசாலை பகுதி விரிவுரையாளர் ஒருவர் கொரோனா தொற்றுக்குள்ளானதால் அவர் நெருங்கிப் பழகிய 40 பேர் தனிமைப்படுத்தப்பட்டனர்.

**-நீர்கொழும்பில் 21 பேர் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டனர்-**

நீர்கொழும்பு, குரண பிரதேசத்தைச் சேர்ந்த இருவர் தனிமைப்படுத்தலுக்காக இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாக நீர்கொழும்பு சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

கந்தகாடு புனர்வாழ்வு முகாமில் உள்ள தனது தந்தையை பார்க்கச் சென்ற இருவரையே இராணுவத்தினர் தனிமைப்படுத்தல் முகாமுக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

02

## கோரிக்கையை நிறைவேற்றாவிட்டால் குடும்பத்தை அழிப்போம்

### பூஸா சிறை அதிகாரிகளுக்கு கைதிகள் அச்சுறுத்தல்

கோரிக்கை நிறைவேற்றப்படாவிடின் சிறைச்சாலை ஆணையாளர் நாயகம், சிறைச்சாலைக்கு பொறுப்பானவர்கள் உட்பட அவர்களது உறவினர்களுக்கும் பூஸா சிறைச்சாலையிலுள்ள சிறப்பு சிறைக்கைதிகள் உயிர் அச்சுறுத்தல் விடுத்துள்ளதாக அந்த சிறைச்சாலையின் உதவி மேற்பார்வையாளர் தெரிவித்துள்ளார்.

பூஸா சிறைச்சாலையில் சிறை வைக்கப்பட்டுள்ள சிறப்பு சிறைக்கைதிகள் முற்பகல் வேளையில் நான்கு மணித்தியாலம் தாம் இருக்கும் சிறைக்கதவுகளை திறந்துவைக்குமாறு கோரி உண்ணாவிரதப் போராட்டமொன்றை முன்னெடுத்து வருகின்ற நிலையில், அது தொடர்பில் குறித்த கைதிகளிடம் விசாரணை செய்தபோதே அவர்கள் இவ்வாறு அச்சுறுத்தல் விடுத்ததாக மேற்படி சிறைச்சாலையின் உதவி மேற்பார்வையாளர் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்துக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், அந்தக் கடிதத்தில், இந்த சிறைக்கைதிகளின் பிரச்சினைகள் தொடர்பில் தனித்தனியாக அவர்களுடன் உரையாடியபோது, அவர்களுக்கு உணவு உண்பதற்கான அவசியம் இருந்தபோதிலும் தாம் ஒரு குழுவாக...

02

முன்னணியில் இருக்கும் திலும் அமுனுகம 3



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன
கண்டியிலிருந்து நாட்டிற்கு

| | | | | |
|---|---|---|---|---|
| அத கோட்டிபதி | 968 ஆவது வாரம் | 2020 ஜூலை 02ஆம் திகதி | ஆங்கில எழுத்து O | 06 56 57 77 |
| அத கோட்டிபதி | 969 ஆவது வாரம் | 2020 ஜூலை 03ஆம் திகதி | ஆங்கில எழுத்து P | 04 19 25 31 |
| கோட்டிபதி கப்ருக | 593 ஆவது வாரம் | 2020 ஜூலை 03ஆம் திகதி | ஆங்கில எழுத்து R | 26 36 45 52 |
| அத கோட்டிபதி | 970 ஆவது வாரம் | 2020 ஜூலை 04ஆம் திகதி | ஆங்கில எழுத்து E | 07 41 64 75 |
| சனிதா வாசனா | 3333 ஆவது வாரம் | 2020 ஜூலை 04ஆம் திகதி | ஆங்கில எழுத்து X | 19 41 53 73 |
| சுப்பர் போல் | 1169 ஆவது வாரம் | 2020 ஜூலை 04ஆம் திகதி | ஆங்கில எழுத்து W | 43 60 69 76 |
| கோட்டிபதி கப்ருக | 594 ஆவது வாரம் | 2020 ஜூலை 05ஆம் திகதி | ஆங்கில எழுத்து D | 11 27 31 49 |
| அத கோட்டிபதி | 971 ஆவது வாரம் | 2020 ஜூலை 05ஆம் திகதி | ஆங்கில எழுத்து K | 14 28 31 38 |
| சுப்பர் போல் | 1170 ஆவது வாரம் | 2020 ஜூலை 05ஆம் திகதி | ஆங்கில எழுத்து D | 03 32 36 75 |
| அத கோட்டிபதி | 972 ஆவது வாரம் | 2020 ஜூலை 06ஆம் திகதி | ஆங்கில எழுத்து K | 12 31 50 61 |
| சனிதா வாசனா | 3334 ஆவது வாரம் | 2020 ஜூலை 06ஆம் திகதி | ஆங்கில எழுத்து H | 08 18 39 50 |
| சுப்பர் போல் | 1171 ஆவது வாரம் | 2020 ஜூலை 06ஆம் திகதி | ஆங்கில எழுத்து U | 10 40 59 70 |
| கோட்டிபதி கப்ருக | 595 ஆவது வாரம் | 2020 ஜூலை 07ஆம் திகதி | ஆங்கில எழுத்து G | 07 20 33 47 |
| அத கோட்டிபதி | 973 ஆவது வாரம் | 2020 ஜூலை 07ஆம் திகதி | ஆங்கில எழுத்து F | 39 62 70 75 |

**உங்கள் விளம்பரங்களுக்கு நாடுங்கள்**

“தமிழன்” பத்திரிகையில் தேர்தல் பிரசார விளம்பரங்கள், வர்த்தக மற்றும் இன்னோரன்ன விளம்பரங்களை பிரசுரிப்பதற்கு தொடர்புகொள்ளுங்கள். தொ.பே.இலக்கம் : 077 693 0739
மின்னஞ்சல் : aslam@liberty.lk இணையம் : www.thamilan.lk

# இராணுவ சிப்பாய்க்கு கொரோனா தொற்று;

## வவுனியாவில் குடும்பத்தினர் தனிமைப்படுத்தலில்

(வவுனியா)

வவுனியா மடுக்கந்தைப் பகுதியில் வசித்துவரும் கந்தக்காடு இராணுவ முகாமில் பணியாற்றும் இராணுவச் சிப்பாய்க்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதையடுத்து, அவரது குடும்பத்தினர் நேற்று தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கந்தக்காடு இராணுவ முகாமில் சாரதியாக பணியாற்றும் இவர், விடுமுறையில் வீட்டிற்கு வந்து கடந்த வெள்ளிக்கிழமை கந்தக்காடு இராணுவ முகாமிற்கு திரும்பிச் சென்றபோதே கொரோனா மருத்துவப் பரிசோதனையில் அவருக்கு கொரோனா தொற்றிருப்பது உறுதி செய்யப்பட்டது.

நேற்று வவுனியாவிலுள்ள அவரது மனைவி, தாயார், மகள், உறவினர் ஒருவருடன் நான்கு பேர் பஸ்ஸில் தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

## முதலாம் பக்கத்தொடர்ச்சி

### ஜனாதிபதி...

பிரதேசங்களுக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.

இவ்விசாரணை நடவடிக்கையின் போது, காலை முதல் மாலை வரையான காலப்பகுதியில் அம்பாறை மாவட்டத்தில் - சாய்ந்தமருது





தற்கொலை தாக்குதலுக்கு முன்னர் சஹ்ரான் குழுவினர் தங்கி இருந்த வீடுகள் மற்றும் தாக்குதல் மேற்கொகொள்ளப்பட்ட இடங்கள் என்பவற்றுக்கு கடும் பாதுகாப்பிற்கு மத்தியில் அவ்வாணைக்குழு உறுப்பினர்கள் வருகை தந்து விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.

இவ்வாறு வருகைதந்த குழுவினர் அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை, நிந்தவூர் மற்றும் இறுதியாக தற்கொலை தாக்குதல் இடம்பெற்றிருந்த சாய்ந்தமருது வொலிவேரியன் கிராமத்தில் உள்ள வீட்டினையும் பார்வையிட்டு ஆய்வுகளை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும், சஹ்ரான் ஹாசிமின் குழு தங்கிருந்த வாடகை வீடுகள், வெடிபொருட்களை மறைத்து வைத்திருந்த மற்றும் தற்கொலைத் தாக்குதலை மேற்கொண்ட பிரதேசங்களுக்கும் இக்குழு சென்று பார்வையிடும் நடவடிக்கைகளில் ஈடுபட்டது. இவர்களின் வருகையை அடுத்து அப்பகுதியில் பொலிஸார் விசேட அதிரடிப்படையினர் பாதுகாப்பினை பலப்படுத்தியிருந்தனர்.

# போராளிகளையே பொதுத் தேர்தலில் களமிறக்கினோம்

## திருகோணமலையில் கருணா அம்மான் தெரிவிப்பு



“மாற்றத்தை உருவாக்கும் சக்தியாக கப்பல் செயற்படும். விரைவில் இந்நாட்டில் மாற்றத்தை நாம் ஏற்படுத்துவோம். வடக்கு கிழக்கு பிரதேசங்கள் விரைவில் அபிவிருத்தியடையும்.” இவ்வாறு தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவரும் பிரதியமைச்சருமான விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா அம்மான்) தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தில் தமிழர் மகா சபையுடன் இணைந்து தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு ஆதரவு வேண்டி நிலாவெளி எட்டாவது மைல்கல் மிற்சுய் வீடமைப்பு கிராமத்தில் நேற்று நடைபெற்ற தேர்தல் பரப்புரையின் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பிரதியமைச்சர் முரளிதரன் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வசதி படைத்தவர்களையும் இறக்குமதி செய்யப்பட்டவர்களையும் இம்முறை தேர்தல் களத்தில் இறக்கியுள்ளது. சாராயத்தவறணைகள் வைத்திருப்போர், மணல் பேர்மிட் கொண்டிருப்போர், பெரிய மில் முதலாளிகளாக இவர்கள் இருக்கிறார்கள். நாங்கள் அப்படி இல்லை. போராட்டக்களத்தில் ஈடுபட்ட போராளிகளையே களம் இறக்கியுள்ளோம். தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணி வன்னியில் பெரும் களம் கண்ட தளபதி தலைமையிலும், அதுபோன்று திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் தளபதிகளையும், அம்பாறை மாவட்டத்தில் எனது தலைமையிலும் முன்னாள் போராளிகளையே களம் இறக்கியுள்ளோம்.

கருணா பெரும் வசதி படைத்தவர் என்று மற்றவர்கள் சொல்லலாம் ஆம், நான் பொருளாதாரத்தில் வசதி படைத்தவன் அல்ல. நல்ல உள்ளத்தால் பெரும் வசதி படைத்தவனே. மற்றவர்களின் கஸ்டத்தை நான் நன்கு உணரந்தவன். மாற்றத்தை உருவாக்கும் சக்தியாக நாம் வருவோம் என்று தெரிவித்தார்.

### செவ்வாய்க்கு...

ஒரே வழி என வானியல் விஞ்ஞானிகள் பரிந்துரைத்துள்ளனர்.

சூரிய குடும்பத்தில் உள்ள சிவப்பு கோளான செவ்வாய் கிரகம் குறித்த ஆராய்ச்சியில் அமெரிக்கா, ஐரோப்பா, இந்தியா உட்பட சில நாடுகள் ஈடுபட்டுள்ளன. ‘ஸ்பேஸ்எக்ஸ்’ போன்ற தனியார் நிறுவனங்களும் செவ்வாய்க்கு மனிதர்களை அனுப்பும் ஆய்வில் ஈடுபட்டுள்ளன.

செவ்வாய்க்கு மனிதர்களை அனுப்ப வேண்டும் என்ற குறிக்கோள் 1950ஆம் ஆண்டிலிருந்து இருக்கிறது. இந்நிலையில் செவ்வாய்க்கு மனிதர்களை அனுப்பும் முதல் விண்கலத்தை 2030 ல் செயல்படுத்த நாசா திட்டமிட்டுள்ளது.

இது குறித்து அமெரிக்காவின் ஜோன் ஹோப்கின்ஸ் பல்கலை விஞ்ஞானிகள் குழு, இதற்கு முதலில் விண்கலத்தை வெள்ளிகோளுக்கு செலுத்த வேண்டும். அங்கு விண்கலத்தை நிறுத்தி பின், அங்கிருந்து செவ்வாய்க்கு பயணிக்க வேண்டும். வெள்ளி கோளின் புவியீர்ப்பு விசை விண்கலம் செல்வதற்கு உதவிகரமாக இருக்கும். இதுதான், செவ்வாயை அடைய ஒரே வழி. இதன் மூலம் நேரம் மற்றும் எரிபொருள் மிச்சமாகும்.

மேலும், பூமிக்கு அருகில் வெள்ளிகோள் இருப்பதால், விண்கலத்தில் ஏதாவது தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டால், மீண்டும் விண்கலத்தை பூமிக்கு விரைவாக திருப்ப ஏதுவாக இருக்கும் என நாசா விண்வெளி நிலையத்திடம் பரிந்துரைத்துள்ளது.

**6.75 கோடி**

சூரியனில் இருந்து இரண்டாவதாக வெள்ளி கோள் உள்ளது. இது சூரியனை ஒருமுறை சுற்றி வர 225 நாட்களும், தன்னைத்தானே சுற்றிவர 243 நாட்களும் செல்கின்றன. சூரியன் - வெள்ளி இடையிலான தூரம் 10.89 கோடி கிலோமீற்றராகும். இது பார்ப்பதற்கு இளஞ்சிவப்பு நிறத்தில் இருக்கும். இது சூரிய குடும்பத்தில் மிக வெப்பமான கோள். இது ‘ஈவினிங் ஸ்டார்’ எனவும் அழைக்கப்படுகிறது. பூமியிலிருந்து 6.25 கோடி கிலோமீற்றர் தூரத்தில் இது உள்ளது.

### வைரங்கள்...

அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. இந்த முகக் கவசங்கள், 4 இலட்சம் ரூபாய் (இலங்கை பெறுமதியில் கிட்டத்தட்ட 10 இலட்ச ரூபா வரை) வரை விற்கப்படுகின்றன.

குஜராத்தில் முதல்வர் விஜய் ரூபானி தலைமையிலான, பாரதீய ஜனதாஆட்சி நடக்கிறது. அங்கு கொரோனா வைரசால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை, 40 ஆயிரத்தை கடந்துள்ளது. இதற்கிடையே வைரஸ் பரவலை தடுக்க, மாநில அரசு, பல நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. ஊரடங்கு தளர்த்தப்பட்டுள்ள போதிலும், மக்களுக்கு சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

முடிவு வெளியே செல்லும்போது முகக்கவசம் அணியவேண்டும் என மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், இங்குள்ள சூரத் நகரில் இருக்கும் நகைக்கடை ஒன்றில், வைரங்கள் பதிக்கப்பட்ட முகக்கவசங்கள், அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. இவை இந்திய ரூபாவில் ஒன்றரை இலட்சம் முதல், 4 இலட்சம் ரூபாய் வரையிலான விலைகளில் விற்பனை செய்யப்படுகின்றன. இது குறித்து, கடையின் உரிமையாளர் தீபக் சோக்சி கூறியதாவது, ஊரடங்கு கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளதால், ஒத்தி வைக்கப்பட்டிருந்த திருமணங்களை நடத்த, பலரும் முடிவு செய்துள்ளனர்.

அதன்படி, ஒரு வாடிக்கையாளர், எங்கள் கடைக்கு வந்து, தங்கள் வீட்டு திருமணத்தில், மணமக்கள் அணிவதற்கு, தனித்துவமான முகக் கவசங்கள் வேண்டும் என கோரினார்.

ஆகையால், எங்கள் வடிவமைப்பாளர்கள் உதவியுடன், வைரங்கள் பதிக்கப்பட்ட முகக் கவசங்களை உருவாக்கி, அந்த வாடிக்கையாளரிடம் வழங்கினோம்.

வரும் நாட்களில், இதுபோன்ற முகக் கவசங்கள் மக்களுக்கு தேவைப்படும் என்பதால், பலவிதமான முகக் கவசங்களை தயார் செய்துள்ளோம். சுத்தமான வைரங்கள் தங்கத்துடன், சுத்தமான வைரங்கள் மற்றும் அமெரிக்க வைரங்களை பயன்படுத்தி, இந்த முகக்கவசங்களை தயாரித்து உள்ளோம்.

மஞ்சள் தங்கத்துடன், அமெரிக்க வைரக் கற்களை இணைத்து உருவாக்கப்பட்டுள்ள முகக்கவசத்தின் விலை, ஒன்றரை இலட்சம் ரூபாவாகும். அதேபோல், வெள்ளை தங்கம் மற்றும் சுத்தமான வைரங்களால் உருவாக்கப்பட்டுள்ள முகக்கவசம், 4 இலட்சம் ரூபாய் மதிப்பாகும். இவ்வாறு அவர் கூறினார்.

### பொது விடுமுறை...

நாயகம் நாலக கலுவெவ தெரிவித்தார்.

சில சமூக ஊடகங்களில் அரச விடுமுறை அறிவிக்கப்படவிருப்பதாக உண்மைக்குப் புறம்பான செய்தி பரப்பப்படுவதாக தெரிவித்த அவர் இதுதொடர்பில் இதுவரை எந்தவித தீர்மானமும் எடுக்கவில்லை என்றும் அவர் மேலும் கூறினார்.

### கோரிக்கையை...

இருப்பதால் உண்ணாவிரதப் போராட்டத்தை கைவிட முடியாது என்று கூறினர்.

தமது கோரிக்கையை நிறைவேற்றாவிடின் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் உட்பட சிறைச்சாலையின் சகல அதிகாரிகள் மற்றும் அவர்களின் உறவினர்களை கொலைசெய்யப் போவதாக அச்சுறுத்தல் விடுத்துள்ளதாக அவர் அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளார்.

மேலும், விசேட சிறைக்கைதிகள் உள்ள பிரிவின் செயற்பாடுகளுக்காக நியமிக்கப்படும் சிறைக்காவலர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு, அவர்களின் பணிகளை செய்யவிடாமல் இவர்கள் இடையூறு செய்ததாகவும் சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்திடம் அவர் தெரிவித்துள்ளார்.

### மேஜர்...

இவர்கள் இருவருக்கும் பி.சி. ஆர். பரிசோதனை செய்யப்படவுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இதேவேளை நீர்கொழும்பில் பல்வேறு இடங்களில் 21 பேர் தமது வீடுகளில் 14 நாட்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக சிரேஷ்ட பொது சுகாதார பரிசோதகர் குணரத்ன தெரிவித்தார்.

இவர்கள் வெளிநாடுகளிலிருந்தும் தனிமைப்படுத்தல் முகாம்களிலிலிருந்தும் வந்தவர்கள். அவர்களை மேலதிகமாக 14 நாட்கள் தமது வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டு அப்பகுதி சுகாதார பரிசோதகர்களினால் கண்காணிக்கப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

இவர்கள் நீர்கொழும்பில் தழுபொத்த, பிடிப்பன, கடற்கரைத் தெரு, திபிரிகஸ்கட்டுவ ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

### பாடசாலைகளுக்கு...

இந்த அறிவித்தலை பின்பற்ற வேண்டுமென கல்வி அமைச்சு குறிப்பிடுகின்றது. அதேசமயம் தபால் மூல வாக்களிப்புக்காக ஏற்கனவே திட்டமிடப்பட்ட பாடசாலைகள் அதன்படி இயங்கும் எனவும் கல்வி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

### கொரோனா வைரஸ்...

அந்தச் சங்கத்தின் பொதுக்குழு உறுப்பினர் வைத்தியர் பிரசாத் கொலம்பகே தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், பாதுகாப்புக்காக பாடசாலைகளை முழுமையாக மூடவேண்டிய அவசியம் இல்லை. மாணவர்களை தொற்றிலிருந்து பாதுகாக்க வேண்டுமாயின், அவர்களின் சுகாதார நிலைமைகள் குறித்து கண்காணிப்பு செயற்பாடுகளை முறையாக முன்னெடுக்க வேண்டியது அவசியமாகும். அவ்வாறு கண்காணிப்பு நடவடிக்கைகள் முறையாக நடைமுறைப்படுத்தப்படுமாக இருந்தால் மாணவர்களின் கல்வி செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்ல முடியும்.

அதேபோன்று, சுகாதார அமைச்சின் நோய்த்தடுப்பு செயற்பாடுகளில் குறைபாடுகள் இருக்குமாக இருந்தால் அவற்றை இனங்கண்டு நிவர்த்திசெய்யவேண்டியதும் அவசியமாகும். குறைபாடுகளை திருத்தம் செய்யாவிட்டால் தொற்றின் தாக்கம் அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன.

கொரோனா நோய்த்தொற்று தொடர்பாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள சங்கம், சுகாதார அமைச்சுக்கு தேவையான ஆலோசனைகளை வழங்கியுள்ளது. அவ்வாறு பல்வேறு தரப்புகளிலிருந்தும் கிடைக்கப்பெறும் ஆலோசனைகளை முறையாக நடைமுறைப்படுத்த வேண்டியது சுகாதார அமைச்சின் பொறுப்பாகும்.

மேலும், சுகாதார அமைச்சின் திட்டங்கள் எந்தளவுக்கு, வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படுகின்றன என்பது கேள்விக்குறியாகியுள்ளது. இந்த நோய்த்தொற்று தொடர்பில் மக்களுக்கு எச்சரிக்கை வழங்குவது மற்றும் நோய்த்தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்போது அதனைக் கட்டுப்படுத்தும் செயற்பாடுகளில் சுகாதார அமைச்சு கவனம் குறைவாக செயற்படுவதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

தற்போதைய நிலைமைக்கமைய, கொரோனா தடுப்பு செயற்பாடுகளில் சுகாதார அமைச்சு முழுமுயற்சி எடுக்கவேண்டும். இதேவேளை, நோய்த்தொற்று தொடர்பாக அதிக கவனம் செலுத்தாவிட்டால், எதிர்காலத்தில் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன என்றும் குறிப்பிட்டார்.

### கொரோனா பரவல்...

அதற்கமைய இன்று 13ஆம் திகதி முதல் 14 மற்றும் 15ஆம் திகதி வரை மூன்று நாட்களும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ இருவரினதும் பங்குப்பற்றலுடன் இடம்பெறவிருந்த சகல பிரசாரக் கூட்டங்களையும் இடைநிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் களமிறங்கவிருக்கும் வேட்பாளர்களால் ஏற்பாடுசெய்யப்படும் சந்திப்புகள் மற்றும் பாரியளவிலான கூட்டங்கள் என அனைத்தையும் மட்டுப்படுத்துமாறு பசில் ராஜபக்ஷ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அத்தோடு, அவ்வாறு தேர்தல் கூட்டங்கள் இடம்பெறுமாக இருந்தால், கடும் சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளுடன் மாத்திரம் அந்தக் கூட்டங்களை ஏற்பாடுசெய்யுமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பிரசாரக் கூட்டங்கள் மற்றும் பிரசார செயற்பாடுகள் தொடர்பான விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அந்த கட்சி தெரிவித்துள்ளது.

அச்சில் முறைமை மற்றும் விநியோக முறைமை முற்றிலும் சுகாதார தன்மைமிக்கது. 'தமிழன்' பத்திரிகை உங்கள் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தியே தினமும் உங்களை வந்தடைகிறது.

# உலகளவில் கொரோனா பாதிப்பு 1.24 கோடி: பலி எண்ணிக்கை 5.59 இலட்சமாக உயர்வு



உலகளவில் கொரோனா வைரஸ் தொற்று பாதித்தவர்களின் எண்ணிக்கை (நேற்றைய நிலைவரப்படி) 1,24,01,262 கோடியை தாண்டியுள்ளது. உயிரிழந்தோரின் எண்ணிக்கை 5,59,047ஆக உயர்ந்துள்ளது.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் சீனாவின் வூஹான் நகரில் தோன்றிய கொரோனா வைரஸ் உலகம் முழுவதும் பரவி பல நாடுகளை முடக்கிப்போட்டுள்ளது. நாளுக்குநாள் பாதிப்பும், மனித உயிரிழப்பு எண்ணிக்கையும் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே வருவது மக்களிடையே பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

உலகளவில் கொரோனா பாதிப்பில் அமெரிக்கா, பிரேஸிலை அடுத்து 3 ஆவது இடத்தில் இந்தியா உள்ளது.

இந்நிலையில், உலகளவில் கடந்த 24 மணிநேரத்தில் 10,705 பேருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. இதனால், பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 1,24,01,262ஆக உயர்ந்துள்ளது.

உயிரிழந்தோரின் எண்ணிக்கை 5,57,405 ஆக அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படும் அதேவேளை, 46,44,707 பேர் தொடர்ந்தும் சிகிச்சைபெற்று வருவதாகவும், இவர்களில் 58,456 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகவும் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்காவில் கொரோனாவால் உயிரிழந்தோர்களின் எண்ணிக்கை 1,37,403 ஆக உயர்ந்துள்ள அதேவேளை, பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 33,55,646 ஆக அதிகரித்துள்ளது.


பிரேஸிலில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 71,492 ஆக அதிகரித்ததுடன், பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 18,40,812 ஆக அதிகரித்துள்ளது.

இந்தியாவில் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 8,50,358 ஆக அதிகரித்துள்ள நிலையில், உயிரிழந்தோரின் எண்ணிக்கை 22,687 ஆக அதிகரித்துள்ளது.

ரஷ்யாவில் கொரோனாவால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 11,205 ஆக அதிகரித்துள்ளது. பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 7,20,547 ஆக அதிகரித்துள்ளது.

பிரித்தானியாவில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 44,798 ஆக அதிகரித்துள்ளதுடன், பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 2,88,953 ஆக உயர்ந்துள்ளது.

# கொரோனா பிடியில் பச்சன் குடும்பம்: அதிர்ச்சியில் பொலிவூட் பிரபலங்கள்





நடிகர் அமிதாப் பச்சன் மற்றும் அவரது மகன் அபிஷேக்கை தொடர்ந்து ஐஸ்வர்யா ராய் மற்றும் அவரது மகள் ஆராதயாவுக்கும் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

77 வயதாகும் பொலிவூட் சூப்பர் ஸ்டார் அமிதாப் பச்சனுக்கு சனியன்று மாலை சுவாசப் பிரச்சினை ஏற்பட்டு மும்பை நானாவதி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு நடந்த கொரோனா பரிசோதனையில் தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டது. இதனால் அவர் சிகிச்சையில் உள்ளார். அவருடன் வீட்டில் அவர் மனைவி ஜெயா பச்சன், மகன் அபிஷேக், மருமகள் ஐஸ்வர்யா, பேரக்குழந்தை ஆராதயா ஆகியோரும் வசித்தனர்.

இதனால் அனைவருக்கும் கொரோனா பரிசோதனை செய்யப்பட்டது. அதில் அபிஷேக்கிற்கும் கொரோனா இருப்பது தெரியவந்தது. ஆனால், ஐஸ்வர்யா, மகள் ஆராதயா, தாய் ஜெயா பச்சனுக்கு கொரோனா ரிசல்ட் நெகடிவ் என்றே வந்தது. இந்நிலையில், ஞாயிறு பிற்பகல் 2.30 மணிக்கு வந்த மற்றொரு பரிசோதனை முடிவில் ஐஸ்வர்யா, மகள் ஆராதயா ஆகியோருக்கு கொரோனா உறுதியானது. இதனால் பொலிவூட் ரசிகர்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

அமிதாப் விரைவில் நலம்பெற கோவில்கள் பலவற்றில் சிறப்புப் பிரார்த்தனைகளை செய்துவருகின்றனர்.

அமிதாப் பச்சனை தொலைபேசியில் தொடர்புகொண்டு நடிகர் ரஜினிகாந்த் நலம் விசாரித்தார். மருத்துவ சிகிச்சைகள் குறித்தும் கேட்டறிந்தார். அவரிடம் அமிதாப், பயப்படும்படி ஏதுமில்லை இலேசான அறிகுறிகளே உள்ளன என தெரிவித்துள்ளார். அதேபோல் நடிகர் கமலும் அமிதாப் விரைவில் நலம்பெற வேண்டும் என டுவிட்டரில் பதிவுசெய்துள்ளார்.


இந்நிலையில், நடிகை ரேகாவின் வீட்டு பாதுகாவலருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து அவரது வீடு சீல் வைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேபோன்று பொலிவூட்டின் மற்றுமொரு மூத்த நடிகரான அனுபம் கெர், அவரது தாய் மற்றும் சகோதரர்கள், உறவினர்கள் உள்ளிட்டோர்களும் இந்நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக அனுபம் கெர் ட்விட்டரில் தெரிவித்துள்ளார். அதேசமயம் அவர், தனக்கு பரிசோதனை செய்யப்பட்டதில் கொரோனா தொற்று இல்லை என முடிவு வந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து நட்சத்திரங்களுக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்படுவது பொலிவூட்டில் பெரும் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

## உலகச் செய்திகள்

# மனித பல் - உதடுடன் வித்தியாசமான மீன்





மலேசியாவில் மனித பல் – உதடுடன் வித்தியாசமான மீன் ஒன்று கண்டறியப்பட்டுள்ளது.

'டிரிகர்' என்ற அந்த மீனின் வாயை மட்டும் பார்க்கும்போது மனித உறுப்பாகவே தோன்றுகிறது. தற்போது இது சமூக வலைத்தளங்களில் வைரலாகியுள்ளது. பலரும் இந்த மீனின் போட்டோவையும், தங்களின் உதட்டு குளோஸ் அப் போட்டோவையும் இணைத்து பகிர்ந்து வருகின்றனர்.

# சீனாவில் உலக சுகாதார அமைப்பின் குழு ஆய்வு

கொரோனா வைரஸ் பரவல் குறித்து ஆராய்வதற்காக உலக சுகாதார அமைப்பின் நிபுணர்கள் குழுவொன்று சீனா சென்றுள்ளது.

கொரோனா வைரஸ் சீனாவின் வூஹான் நகரத்திலுள்ள சந்தைப் பகுதியிலிருந்து விலங்குகள் மூலமாக மனிதர்களுக்குப் பரவியதாக நம்பப்படுகிறது.

எனினும், இதன் உண்மைத்தன்மை குறித்தும், கொரோனா வைரஸின் பரவல் குறித்தும் சீனாவுக்கு நேரில் சென்று ஆய்வு நடத்த உலக சுகாதார அமைப்பு திட்டமிட்டது.

அதன்படி, நிபுணர்கள் அடங்கிய குழுவொன்றை சீனாவுக்கு அனுப்பிவைத்துள்ளது.

கொரோனா, சீனாவின் ஆய்வகங்களில் செயற்கையாக உருவாக்கப்பட்டதாக அமெரிக்கா தொடர்ந்து குற்றஞ்சாட்டி வருகிறது.

எனினும், அதற்கான ஆதாரங்களை அமெரிக்கா தங்களிடம் வழங்கவில்லை என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்திருந்தது. அதையடுத்து, கொரோனா நோய்த்தொற்று விவகாரத்தில் சீனாவுடன் இணைந்து உலக நாடுகளைத் தவறாக வழிநடத்தி வருவதாக உலக சுகாதார அமைப்பு மீதும் அமெரிக்கா குற்றஞ்சாட்டத் தொடங்கியது.

இதனையடுத்து, கடந்த சில நாட்களுக்கு முன்னர் அமெரிக்க உலக சுகாதார அமைப்பிலிருந்து விலகுவதாக உத்தியோகபூர்வமாக அறிவித்திருந்தது. இந்நிலையில், உலக சுகாதார அமைப்பின் குழு சீனா சென்றடைந்துள்ளது.

# காரைதீவு ஸ்ரீ நந்தவன சித்திவிநாயகர் ஆலய ஆடி அமாவாசை கொடியேற்றம்





அம்பாறை மாவட்ட காரைதீவு ஸ்ரீ நந்தவன சித்திவிநாயகர் ஆலயத்தின் வருடாந்த ஆடி அமாவாசை திருவிழாவானது கடந்த சனிக்கிழமையன்று காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. இதன்போது மரபு முறைப்படி காரைதீவு ஆதிசிவன் ஆலயத்திலிருந்து ஆலய தர்மகர்த்தாக்களால் கொடிக்கம்பச் சீலை வீதி வழியே நடைபவனியாக ஸ்ரீ நந்தவன சித்திவிநாயகா ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு குருக்களால் கொடிக்கம்பத்தில் கொடிச்சீலை ஏற்றப்பட்டதுடன் பக்தர்களின் வழிபாடுகளும் இடம்பெற்றன.

# டெங்குவை கட்டுப்படுத்த புகை விசுறும் நடவடிக்கை



வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் நோயாளிகள் மற்றும் நோயாளிகளை பார்வையிட வரும் நபர்களை டெங்கு நோயிலிருந்து பாதுகாக்க புகை விசுறும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

வைத்தியசாலை நிர்வாகத்தின் ஏற்பாட்டில் கோறளைப்பற்று வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினால் நோயாளர்கள் விடுதி, வைத்தியசாலை வளாகம் என்பவற்றிற்கு புகை விசுறும் நடவடிக்கைகள் நேற்று மேற்கொள்ளப்பட்டன.

வாழைச்சேனை, ஓட்டமாவடி பகுதிகளில் டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டு சிகிச்சைபெற்று வருவதோடு, குறித்த பகுதிகளில் பெருகிவரும் டெங்கு நோயைக் கட்டுப்படுத்த சுகாதார வைத்திய அதிகாரிகளின் ஆலோசனைகளுக்கமைய பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# நல்லாட்சிக்கு முட்டுக்கொடுத்த கூட்டமைப்புக்கு இம்முறை மக்கள் தகுந்த பாடம் கற்பிப்பார்கள்

## கிழக்கு மாகாண முன்னாள் விவசாய அமைச்சர் தெரிவிப்பு



(பாண்டிருப்பு)

அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் தலைமுறை தலைமுறையாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்து எந்தவொரு விமோசனத்தையும் பெறவில்லை. மக்களைப்பற்றிய எந்தவொரு திட்டங்களும் இல்லாத கட்சியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளது. கூட்டமைப்பு என்பது உணர்ச்சி அரசியல் செய்தே எமது இளைஞர்களை பலிக்கடாவாக்கிய கட்சி. ஆகவே, தமிழ் மக்கள் இனியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிக்கக் கூடாது. இவ்வாறு அம்பாறை மாவட்டத்தில் ஈழமக்கள் ஜனநாயக கட்சியில் (ஈ.பி.டி.பி.) போட்டியிடும் வேட்பாளர் முன்னாள் கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் துரையப்பா நவரெட்ணராஜா தெரிவித்தார்.

கல்முனையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

அம்பாறை மாவட்ட இளைஞர்கள் வேலைவாய்ப்பின்றி எதிர்கால திட்டமுமின்றி உள்ளனர். ஆகவே, இங்குள்ள இளைஞர்கள் மாற்றத்தை உண்டுபண்ணும் வேலைத்திட்டத்தில் இணையுங்கள். மாற்றம் ஒன்றே மாறாதது. ஏனைய பெரும்பான்மைக் கட்சிகளோடு இணைந்து அவர்கள் போடுகின்ற பிச்சையில் வாழாமல் எமக்கான ஒரு பிரதிநிதித்துவத்தைப் பெறவேண்டும். இளைஞர்களின் சக்தி மேலானது. அம்பாறை மாவட்டத்தின் கல்வியை கட்டியெழுப்பவேண்டும், எமது பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பவேண்டும் இதற்காக மாற்றத்தை நோக்கிப்பயணிப்போம் வாருங்கள் என அறைகூவல் விடுக்கின்றேன்.

அம்பாறை மாவட்ட தமிழ் மக்களின் எந்தவொரு பிரச்சினையையும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினால் தீர்த்துவைக்க முடியவில்லை. கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தைக்கூட தரமுயர்த்திக் கொடுக்க முடியவில்லை. நிச்சயமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தோற்கடிப்போம். கூட்டமைப்பினர் கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் அவர்களுக்குக் கிடைத்த மாபெரும் வாய்ப்பை இழந்திருக்கிறார்கள். மக்களுக்கு செய்யவேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள், வேலைவாய்ப்புகள் என்பவற்றை மறந்து தங்களுக்கும் தங்களது குடும்பத்திற்கும் தேவையானதை மட்டும் பார்த்துக்கொண்டு அரசில் அங்கம்வகிக்காத அமைச்சர்களாக இருந்தார்கள். அதன் பிரதிபலனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இத்தேர்தலில் அனுபவிக்கும். நல்லாட்சிக்கு முட்டுக்கொடுத்து அதனைக் காப்பாற்றியதற்கான பரிசை தமிழ் மக்கள் வழங்குவார்கள். நாங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தோற்கடித்து வெற்றிபெறுவோம்.

கருணா அம்மான் ஐந்துவருடமாக அமைச்சராக இருந்தவர். அந்த ஐந்து வருடங்களில் அம்பாறை மாவட்டத்தை திரும்பிக்கூட பார்க்கவில்லை. மட்டக்களப்பில் அபிவிருத்தியைச் செய்தவர், அம்பாறை மாவட்டம் என்ற ஒன்று இருப்பதை அவர் மறந்து செயற்பட்டார். மீள்குடியேற்ற அமைச்சராக இருந்து அம்பாறை மீள்குடியேற்றக் கிராமங்களை ஏனென்றும் கேட்கவில்லை.

அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் உறுதியான – நிலையான அபிவிருத்தியை ஏற்படுத்தக்கூடிய தமிழ்க் கட்சிக்கு வாக்களிக்கவேண்டும். கடந்த காலங்களில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் அம்பாறை மாவட்ட தமிழ் மக்களுக்கு பல்வேறு அபிவிருத்திகள், வேலைவாய்ப்புகள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன. இம்முறை ஈ.பி.டி.பி. கட்சி சார்பில் அம்பாறை மாவட்டத்தில் தமிழர் ஒருவர் தெரிவுசெய்யப்பட்டால், அரசாங்கத்தில் அங்கம்வகிக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் உதவியுடன் இளைஞர், யுவதிகளுக்கான வேலைவாய்ப்பு, அபிவிருத்தி, வாழ்வாதார உதவிகள் என பலவற்றை செய்யமுடியும். உரிமை, உரிமை என்று இருந்ததையும் இழந்த கதையாக எமது நிலைமாறிவிட்டது. இனி இருப்பதையாவது தக்கவைத்துக்கொண்டு அபிவிருத்தி சார்ந்த உரிமையுடன் வாழ்வதற்கு மக்கள் சிந்தித்து வாக்களிக்கவேண்டும் – என்றார்.





யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி ஆலயத்திலிருந்து புறப்பட்டு 28 நாட்களின் பின்னர் காரைதீவை வந்தடைந்த பாதயாத்திரிகளை சந்தித்த அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன், நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் நோய்த் தொற்று காரணமாக சுகாதார பாதுகாப்பு கருத்திற்கொண்டு தங்கள் கதிர்காமத்திற்கான பாதயாத்திரையை உகந்தையுடன் நிறைவுசெய்யுமாறு யாத்திரீகர்களிடம் கேட்டுக் கொண்டதை படத்தில் காணலாம். (படங்கள் - அம்பாறை)

# தேற்றாத்தீவில் வாகன விபத்து



களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தேற்றாத்தீவு பிரதான வீதியில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற வாகன விபத்தில் அதில் பயணித்தோர் தெய்வாதீனமாக உயிர்பிழைத்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது:

மட்டக்களப்பிலிருந்து திருமண வைபவத்தில் கலந்துகொண்டு கல்முனை நோக்கி பயணித்த டொல்பின் ரக வாகனம் தேற்றாத்தீவு பிரதான வீதியில் வைத்து வாகனத்தின் முன் டயர் வெடித்ததில் வாகனம் பிரதான வீதியைவிட்டு வீதியில் இருந்த மதில் மீது மோதி விபத்துக்குள்ளாகி இருந்தது.

இருப்பினும், வாகனத்தில் பயணித்த எவருக்கும் எந்தவித காயமோ உயிர்ச் சேதமோ இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

விபத்துக்குள்ளான வாகனத்தின் ஒரு பகுதி முழுமையாக சேதமடைந்துள்ளதுடன், இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42, தொலைபேசி : 0115 88 61 87
விளம்பரம் : 077 693 0739
மின்னஞ்சல் : thamilannews@yahoo.com

# பாவம் ஜனநாயகம்!

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் முன்னாள் பொறுப்பதிகாரியும், வழக்கொன்றுக்காக பிணையிலுள்ள நபருமான நியோமால் ரங்கஜீவ, 'மவ்பிம' பத்திரிகையின் புகைப்பட ஊடகவியலாளர் அகில ஜெயவர்தனவை கொழும்பு மேல்நீதிமன்ற வளாகத்தில் வைத்து வலுக்கட்டாயமாக இழுத்துச்சென்று அவரது கடமைகளுக்கு இடையூறு விளைவித்துள்ளார்.

ஒரு குற்றவாளியை அழைத்துச்செல்வதுபோல சட்டையை முதுகுக்குப் பின்னால் இறுக்கிப்பிடித்து (குற்றவாளி என்றாலும் அவரை அப்படி அழைத்துச் செல்லமுடியாது) ஊடகவியலாளரை இழுத்துச்செல்கிறார். பின்னர் அங்குள்ள பொலிஸ் பிரிவில் ஊடகரின் கெமராக்களின் 'சிப்' அட்டைகளை அகற்றிவிட்டு அச்சுறுத்தல் பாணியில் மிரட்டியுமிருக்கிறார். "நாங்கள் எல்லாம் நல்லவர்கள் அல்ல..." என்று ரங்கஜீவ கூறியதாக பாதிக்கப்பட்ட ஊடகரே வெளியில் வந்து தெரிவித்திருக்கிறார்.

"நல்லவர்கள் அல்ல" என்ற வார்த்தையை ரங்கஜீவ சொல்லியிருக்கவே தேவையில்லை. பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப்பிரிவு உத்தியோகத்தர்களின் வண்டவாளம் தண்டவாளம் ஏறிவரும் நிலையில், நல்லவர்கள் யார், கெட்டவர்கள் யார் என்ற நல்ல விளக்கம் இப்பொழுது மக்களிடம் உண்டு.

சம்பந்தப்பட்ட புகைப்பட ஊடகர் தவறு செய்திருந்தால் அதனை சுட்டிக்காட்டியிருக்கலாம், அல்லது அங்கிருந்த நீதிமன்ற காவல்நிலையப் பொலிஸாரிடம் கூறியிருக்கலாம். அப்படியும் இல்லாத பட்சத்தில் அவர் பணியாற்றும் ஊடக நிறுவன முகாமைத்துவத்திடம் முறையிட்டிருக்கலாம். அதைவிடுத்து ஊடகவியலாளர் ஒருவரை இப்படி இழுத்துச்செல்ல ரங்கஜீவவுக்கு அதிகாரத்தை வழங்கியது யார்?

போதைப்பொருள் தடுப்புப்பிரிவின் உயர்மட்ட அதிகாரிகள் முதல் கீழ்மட்ட அதிகாரிகள் வரை சட்டதிட்டங்களை மீறி, நாட்டுக்கே அவமானத்தை ஏற்படுத்தும் வகையில் "வேலியே பயிரை மேய்ந்த கதை"யாக நடந்துகொண்ட விடயங்கள் வெளியில் வந்து சந்தி சிரிக்கிறது. அதற்குள் அதன் முன்னாள் பொலிஸ் பரிசோதகர் ரங்கஜீவ இவ்வாறு நடந்துகொண்டிருப்பது அந்த அதிகார - ஆணவ திமிர்த்தனத்தையே காட்டுகிறது.

இந்தச் சம்பவம் குறித்து அரசியல் கட்சிகள் கண்டனங்களை வெளியிட்டு வருகின்றன. மறுபுறம் அரசாங்கத் தகவல் திணைக்களம், நேற்று பதில் பொலிஸ்மா அதிபருக்கு கடிதமொன்றை அனுப்பி இதுபற்றி விசாரிக்க வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளது. சம்பந்தப்பட்ட புகைப்படப்பிடிப்பாளர் பொலிஸ் முறைப்பாடொன்றையும் செய்துள்ளார். இப்போது சட்டம் தன் கடமையைச் செய்யவேண்டும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு ஆட்சிக்கு வந்தால் ஊடகவியலாளர்களின் குரல்வளை நசுக்கப்படும், ஊடக சுதந்திரம் இருக்காதென கடந்த காலங்களில் பல்வேறு தரப்புகளாலும் செய்யப்பட்ட விமர்சனங்களை பொய்யாக்க வேண்டுமானால் - இல்லை எமது ஆட்சி சுத்தமானது என்று மார்தட்ட வேண்டுமானால் இந்தச் சம்பவம் குறித்து நீதியான விசாரணைகளை நடத்தி ஊடகவியலாளருக்கு அரசு நீதியை பெற்றுக்கொடுக்க வேண்டும்.

அதேசமயம், அப்படி ஊடகர் ஒருவரை இழுத்துச்சென்று அராஜகமாக செயற்படும் தைரியத்தை அவருக்குக் கொடுத்த அந்த சக்தி யார் என்பதையும் அரசு கண்டறிய வேண்டும். ஏனெனில், ஒழுக்கமான சமுதாயமொன்றை உருவாக்கும் ஜனாதிபதி கோட்டாபயவின் செயற்பாடுகளுக்கு இப்படியான புல்லுருவிகளே தடையாக இருக்கக் கூடும்.

ஜனாதிபதி கோட்டாபய பதவியேற்ற பின்னர் ஊடகவியலாளர் ஒருவர் மீது நடத்தப்பட்ட உச்சக்கட்ட வன்முறை இது. இப்படியான சம்பவங்களை கணக்கிலெடுக்காமல் விட்டதால்தான் கடந்த காலங்களில் 'டசின்' கணக்கில் ஊடகவியலாளர்கள் உயிரிழந்தனர். தமிழ் - சிங்கள ஊடகவியலாளர்கள் பலர் அச்சுறுத்தல் காரணமாக நாட்டைவிட்டே வெளியேறினர். தமிழ் ஊடக சமூகத்தைவிட வேறெந்த தரப்பும் இப்படியான சம்பவங்களால் பாதிக்கப்பட்டிருக்கமாட்டார்கள். இதனால்தான் எமக்கு நடந்த அநீதி வேறு யாருக்கும் நடந்துவிடக்கூடாதென்று தமிழ் ஊடக சமூகம் மனதார விரும்புகின்றது. இதில் உரிய நடவடிக்கை எடுக்குமாறும் இங்கே வலியுறுத்த விழைகிறது.

எனவே, பாதிக்கப்பட்ட ஊடகரின் முறைப்பாட்டை கவனத்திற்கொண்டு, அவருக்கு நீதி கிடைக்கும் வகையில் அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். அரசு இதனைக் கவனிக்காதபட்சத்தில் ரங்கஜீவவின் இந்த அதிகார ஆணவ அத்துமீறலின் பின்னால் அரசின் ஏதோவொரு பெரிய கை இருக்கிறது என்றே நினைத்துக்கொள்ள வேண்டும்.

இந்த விடயத்திற்காக ரங்கஜீவ மன்னிப்புக் கோரினார் என்று செய்திகள் வெளிவந்தன. செய்வதையெல்லாம் செய்துவிட்டு மன்னிப்பைக் கோருவது வழமையான வாடிக்கை. அப்படி மன்னிப்பைக் கோரிவிட்டால் அவர் செய்தவற்றுக்கு பரிகாரம் என்ன? அச்சுறுத்தலுக்கான ஊடகரின் உளநிலை பாதிப்புக்கான நிவாரணம் என்ன?

ஜனநாயகத்தின் நான்காவது தூண் என்று கருதப்படும் ஊடகத்தின் பிரதிநிதி ஒருவர், நீதிமன்ற வளாகத்திற்குள் அதுவும் வழக்கொன்றின் பிணையில் இருப்பவரால் இழுத்துச்செல்லப்படும் காட்சியை பார்க்கும்போது மனதுக்குள் முணுமுணுக்கத் தோன்றிய வார்த்தை

*"பாவம் ஜனநாயகம்".*

**"தமிழன்" பத்திரிகை தொடர்பான உங்கள் கருத்துக்களை news@liberty.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.**

# கொரோனாவை தடுக்க யோகா பயிற்சி

கொரோனா தொற்றிலிருந்து தற்காத்துக்கொள்ளும் வகையில் தினம் 12 வகையான யோகா பயிற்சிகளை மேற்கொள்ளலாம் என ஆலோசனை வழங்கப்படுகிறது.

பொதுமக்கள் தங்களைத் தாங்களே தற்காத்துக்கொள்ளும் வகையில் சித்த மருத்துவ உணவுகள், யோகா பயிற்சிகள் குறித்த விபரங்களை சுகாதாரத்துறை வெளியிட்டுள்ளது. அதன்படி தினமும் 12 வகையான யோகா பயிற்சி செய்வதன் வாயிலாக உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரித்து கொரோனா வராமல் தடுக்கமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் விபரம்:

## கோமுகாசனம்



கால்களை முன்னோக்கி நீட்டி வலது காலை மடித்து குதிக்கால் இடது இடுப்பின் வெளிப்பகுதியில் படும்படி வைக்கவும். இரு கைகளையும் பின்னோக்கி மடக்கி கோர்க்கவும். இதேபோல் இடதுபுறமும் செய்யவும்.

## திரிகோனாசனம்



கால்களை குறைந்தது ஒரு அடி அகற்றி வைக்கவும். முச்சை வெளிவிடும்போது பக்கவாட்டில் குனிந்து வலது கையை வலது குதிகால் அருகில் வைக்கவும். இதேபோல் இடதுபுறமும் செய்யவும்.

## பவனமுக்தாசனம்



படுத்த நிலையில் இரு கால்களையும் சேர்த்துவைத்து கால்களை மேலே உயர்த்தி வயிற்றுப் பகுதியோடு அழுத்தி இரு கைகளையும் சேர்த்து பிடித்துக்கொண்டு மூட்டுக்கு இடையில் தாடையை வைத்துக்கொள்ள வேண்டும்.

## நாடி சுத்தி பிராணாயாமம்



வலது நாசியை மூடி, இடது நாசி வழியாக மூச்சை உள்ளிழுத்து பின் இடது நாசியை மூடி, வலது நாசி வழியாக மூச்சை வெளிவிட வேண்டும். மீண்டும் வலது நாசி வழியாக மூச்சை உள்ளிழுத்து பின் வலது நாசியை மூடி இடது நாசி வழியாக வெளியிட வேண்டும்.

## தடாசனம்



இரண்டு கால்களையும் சேர்த்துவைத்து நேராக நிற்க வேண்டும். மூச்சை இழுத்தபடி குதிக்காலை உயர்த்தி இரண்டு கைகளையும் இணைத்து தலைக்கு மேல் நேராக உயர்த்த வேண்டும்.

## மக்கராசனம்



குப்புறப்படுத்து தலை, தோள்பட்டை மற்றும் தாடையை மேலே உயர்த்தி இரு கைகளால் தாங்கிக்கொள்ள வேண்டும். இந்நிலையில், கண்கள் மூடி இருக்கவும்.சலபாசனம் குப்புறப்படுத்து இரண்டு கைகளையும் தொடையின் கீழே வைக்கவும். மூச்சை உள் இழுத்தபடி இரு கால்களையும் மேலே தூக்கி முடிந்தவரை உயர்த்தவும்.

## பிராமரி பிராணாயாமம்



ஆட்காட்டி விரலை நீட்டி காதுகளில் வைத்துக்கொள்ள வேண்டும். மூச்சை ஆழமாக உள்ளிழுத்து வெளிவிடும்போது ம்ம்ம்... தேனீ ரீங்காரம் இடுவதுபோல் வாயை மூடி சத்தம் எழுப்பவேண்டும்.

## மேரு வக்ராசனம்



கால்களை முன்னோக்கி நீட்டி முதுகுத்தண்டை நேரே வைத்து அமரவும். வலது காலை மடித்து குதிக்கால் இடது முட்டியின் உட்பகுதியில் படும்படி வைக்கவும். மூச்சை உள்ளே இழுத்து வலதுபுறம் பின் திரும்பி இரு கைகளையும் முதுகுத்தண்டின் பின்புறம் வைக்கவும். இதைபோல் இடதுபுறமும் செய்யவும்.

## நாசிகளை சுத்தம் செய்யும் பயிற்சி



உப்பு நீர் உள்ள நேத்தி பாத்திரத்தை மூக்கு துவாரத்தில் நுழைத்து முன்புறம் குனிந்து நிற்கவும். தலையை ஒருபுறமாக சாய்த்து வாயை திறந்து வைத்து நீர் வெளியேறுமாறு செய்யவும். இதேபோல் மறு மூக்கு துவாரத்தில் பயிற்சி செய்யவும்.

## ஓம் உச்சரிக்கும் தியான பயிற்சி

கண்கள் மூடியபடி அமைதியான நிலையில் தலை, கழுத்து, முதுகுத்தண்டு வடத்தை நேராக வைத்துக்கொள்ளவும். ஆழமாக மூச்சை உள்ளிழுத்து வெளிவிடும்போது ஓம் இல்லையேல் அ...உ... ம்... என உச்சரித்து சுவாசத்தின் மீது கவனம் செலுத்தவேண்டும்.

# வெலிக்கடை சிறைச்சாலையிலிருந்து விடுவிக்கப்பட்ட கைதிகள் திருப்பியழைப்பு!



வெலிக்கடை சிறைச்சாலையிலிருந்த விடுவிக்கப்பட்ட 62 கைதிகளையும் மீள சிறைக்கு அழைத்து பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது.

வெலிக்கடை சிறைச்சாலையில் இருவர் கொரோனா தொற்றுக்கு இலக்கானதைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

கந்தக்காடு புனர்வாழ்வு மையத்திலிருந்து வெலிக்கடை சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்பட்டவர் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டிருந்தார்.

ஜூலை முதலாம் திகதி நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்காக, ஜூன் 27ஆம் திகதி அவர் சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்தார்.

ஜூலை 7ஆம் திகதி நடத்தப்பட்ட பரிசோதனையில் கைதிக்கு கொரோனா தொற்று உறுதியானது. ஏனைய கைதிகளிடம் நடத்தப்பட்ட பரிசோதனையில் மேலுமொரு கைதிக்கும் தொற்று இருப்பது உறுதியானது. இந்தக் காலகட்டத்தில் சிறைச்சாலையிலிருந்து விடுவிக்கப்பட்ட 62 கைதிகளையும் மீள சிறைச்சாலைக்கு அழைத்து, பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

# பொலிஸாரின் துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்தவரின் வீட்டுக்கே சென்று ஆறுதல் சொன்ன டீ.ஐ.ஜி!



அங்குலன, லுனாவ பகுதியில் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்தவரின் இல்லத்திற்கு மேல்மாகாணத்திற்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் நேரில் சென்று, குடும்பத்திற்கு ஆறுதல் கூறினார்.

சம்பவம் தொடர்பாக நீதியான விசாரணை நடத்தப்பட்டு, தவறிழைத்த பொலிஸார் மீது கடுமையான சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார்.

இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் 4 பிள்ளைகளின் தந்தையான அமித் கருணாரத்ன (வயது 39) என்வரே கொல்லப்பட்டிருந்தார். மீனவரான அவரும், ஏனைய 3 மீனவர்களும், மீன்பிடிக்கச் செல்வதற்காக 2 முச்சக்கரவண்டிகளில் கடற்கரைக்கு சென்றபோது இந்த அனர்த்தம் நிகழ்ந்தது.

லுனாவ பாலம் அருகே பொலிஸார் சிலர் திடீர் வீதித்தடை அமைத்து சோதனையில் ஈடுபட்டனர். சம்பந்தப்பட்டவர்கள் பயணித்த இரண்டு முச்சக்கரவண்டிகளும் தடுத்து நிறுத்தப்பட்டன.

பொலிஸார் மற்றும் சாட்சிகளின் கூற்றுப்படி, வாகன வருமானவரி பத்திரத்தை சரிபார்க்க முயன்றபோது பாதிக்கப்பட்டவருக்கும் பொலிஸாருக்குமிடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

உயிரிழந்தவர் அதிகாரி ஒருவரை கல்லால் தாக்க முயன்றதாகவும், இதனால் பொலிஸ் உத்தியோகத்தர் சுட நேர்ந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தை நேரில் பார்த்ததாக குறைந்தது 4 சாட்சிகள் இருப்பதாக, அவர்கள் பத்திரிகையாளர்களிடம் தகவல் வெளியிட்டனர். அவர்களின் கூற்றுப்படி, பொலிஸாருடனான வாதத்தின் பின், அவர் அங்கிருந்து வெளியேற திரும்பியபோது பொலிஸாரின் துப்பாக்கிச்சூடு நடந்ததாகத் தெரிவித்தனர். இதையடுத்து, பிரதேசவாசிகள் கோபமடைந்து அந்தப் பகுதியில் குவிந்தனர். அங்கு பதற்றமான சூழல் நிலவியது.

இதையடுத்து அங்குலான பொலிஸ் நிலையத்தைச் சுற்றி கலகமடக்கும் பொலிஸார், அதிரடிப்படையினர் குவிக்கப்பட்டனர். ஆனால், வன்முறைச் சம்பவங்கள் பதிவாகவில்லை.

பதற்றத்தைத் தணிக்கும் முயற்சியில் மேற்கு மாகாணத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் ஈடுபட்டார். நேற்றுமுன்தினம் மாலை சம்பவ இடத்திற்கு நேரில் சென்று ஆய்வு நடத்தினார்.

பின்னர் உயிரிழந்தவரின் வீட்டுக்கு நேரில் சென்று வருத்தம் தெரிவித்தார். சம்பவம் தொடர்பாக பக்கச்சார்பற்ற விசாரணை நடக்குமென உறுதியளித்தார். விசாரணையில் துப்பாக்கிச்சூட்டில் ஈடுபட்ட அதிகாரி குற்றமிழைத்தது கண்டறியப்பட்டால் கடுமையான சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்றார். உயிரிழந்தவரின் மகனொருவர், தனது தந்தை பொலிஸ் அதிகாரியொருவரால் இழிவுபடுத்தப்பட்டதாகவும், அவரது வார்த்தைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தபோது, தந்தை தாக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். தனது தந்தையின் வருமானத்திலேயே குடும்பம் தங்கியிருந்ததாகவும், தமக்கு நீதி கிடைக்க வேண்டுமென்றும் தெரிவித்தார். சம்பவத்திற்கு நீதி வழங்கப்படும் என தேசபந்து தென்னக்கோன் மீள உறுதியளித்தார்.

அந்தப் பகுதிகளிலுள்ள போதைப்பொருள் வர்த்தகர்கள் மற்றும் சட்டவிரோத குழுக்கள் இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி மக்களை தூண்டிவிட முயல்வதாக தெரிவித்த தேசபந்து தென்னக்கோன், அப்படியானவர்களின் வலையில் விழாமல் எச்சரிக்கையாக இருக்கும்படி உறவினர்களையும் விழிப்பூட்டும்படி குடும்பத்தினரையும் கேட்டுக்கொண்டார். அத்துடன், உயிரிழந்தவரின் சிறுவர்களின் நலன்களை பொலிஸார் கவனிக்க விரும்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

# சனச வங்கி நிதி மோசடி: 6 பேருக்கு விளக்கமறியல்!


2011ஆம் ஆண்டு முதல் 2016ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் கம்பஹா மாவட்டத்தில் சனச வங்கியிலிருந்து 708 மில்லியன் ரூபாவுக்கு அதிகமான நிதியை மோசடி செய்த குற்றச்சாட்டு தொடர்பில் 6 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்த வங்கியின் முன்னாள் பிரதிப் பொது முகாமையாளர் மற்றும் முன்னாள் பணிப்பாளர்கள் 5 பேரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

55, 62, 65, 75, மற்றும் 81 வயதுடைய நபர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் கம்பஹா நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதை அடுத்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

# போலித் தகவல்களை முன்னெடுப்போருக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை



கொரோனா வைரஸ் தொற்று நோயாளிகள் குறித்து உண்மைக்குப் புறம்பான தகவல்களை முன்னெடுப்பவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் - என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்தார். பொலிஸ் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது,

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் அதிகரித்து வருகின்றது. கொரோனா வைரஸ் நோயாளர்களின் எண்ணிக்கை தொடர்பாக பல இடங்களில் போலியான தகவல்கள் பரப்பப்படுகின்றன.

உண்மைக்குப்புறம்பான தகவல்களினால் மக்கள் மத்தியில் பதற்றமான சூழ்நிலை ஏற்படுத்தப்படுகிறது. இவ்வாறு போலியான தகவல்களை பரப்புபவர்கள் எவராக இருந்தாலும் அவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அதே போன்று சமூக வலைத்தளங்களிலும் கொரோனா வைரஸ் தொற்று தொடர்பாக போலியான தகவல்களை வெளியிடுபவர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படும் - என்று கூறினார்.

# நாமல் குருநாகலில் பிரசாரம்





இம்முறை பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் குருநாகல் மாவட்டத்தில் போட்டியிடும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ ஆகியோருக்கு ஆதரவு வழங்குமுகமாக, குருநாகல் மாவட்ட முஸ்லிம் இளைஞர் சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மாநாடு, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் தலைமையில் குருநாகல் புளூ ஸ்கை ஹோட்டலில் நடைபெற்றது.

இந்த மாநாட்டில் குருநாகல் நகர மேயர் துஷார சஞ்சீவ, முன்னாள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இளைஞர் அணியின் குருநாகல் மாவட்ட அமைப்பாளரும், கட்சியின் கல்விக்கான தேசிய இணைப்பாளருமான சாபிர் மன்சூர், மாவத்தகம பிரதேச சபையின் முன்னாள் எதிர்கட்சித் தலைவர் ஏ.ஆர்.எம்.ரிபால், காந்தா சவிய பெண்கள் அமைப்பின் தலைவி பெரோஸா முஸம்மில், வடமேல் மாகாண வேலையற்ற பட்டதாரிகள் சங்க உறுப்பினர்கள் உள்ளிட்ட இளைஞர், யுவதிகள் பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது ஸ்ரீலங்கா மக்கள் காங்கிரஸின் வேட்பாளர் எஸ்.எவ். ரமீஸா மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் வேட்பாளர் எம்.எச்.எம்.ரிஷாட் ஆகியோர் நாமல் ராஜக்ஷவிடம் கட்சி அங்கத்துவத்தைப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# முஸ்லிம் காங்கிரஸ் எனும் பேரியக்கத்தை எந்தப் பூச்சியாலும் அழித்துவிட முடியாது!

## ஏறாவூரில் ஹக்கீம் தெரிவிப்பு



-செங்கலடி-

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எனும் பேரியக்கத்தை எந்தப் பூச்சியாலும் அழித்துவிட முடியாது - என லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் போட்டியிடும் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நஸீர் அஹமட்டுக்கு ஆதரவு தெரிவிக்கும் கூட்டம் ஏறாவூரில் இடம்பெற்றபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

முன்னாள் முதலமைச்சரின் அலுவலக கேட்போர் வளாகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றிய ஹக்கீம்,

வண்ணாத்திப்பூச்சியின் ஆயுள் மிகக் குறைவு. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை கருவறுக்கப் புறப்பட்ட கூட்டம் எதைப் பற்றி விமர்சித்தாலும் அதனை முஸ்லிம்கள் பொருட்படுத்தமாட்டார்கள். வேறுவழியின்றி அவர்கள் தங்களது ஆற்றாமையினால் கொக்கரித்துத் திரிகிறார்கள்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை கருவறுக்க நினைத்த கூட்டம் எத்தனையோ கொப்புகளில் தாவித் தாவி கடைசியாக இப்பொழுது வண்ணாத்திப்பூச்சி வடிவமெடுத்துள்ளது. வண்ணாத்திப்பூச்சியின் ஆயுள் குறைவு என்று உங்கள் எல்லோருக்கும் தெரியும் .

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை அழிக்க எத்தனை பூச்சிகள் உருவாகினாலும் அது ஒரு பலமான பேரியக்கம். அதனால் அக்கட்சியை அழிக்க முடியாது. அதன் வியூகங்கள் விசாலமானவை.

ஜனாதிபதித் தேர்தலில் வென்றவர்கள் இலகுவாக நாடாளுமன்றத்தில் வென்றுவிடுவார்கள் என்று அர்த்தமல்ல.

1999ஆம் ஆண்டு சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க வெற்றிபெற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இல்லாமல் ஆட்சியமைக்க முடியவில்லை. அந்தத் தேர்தலில் நாம் 11 ஆசனங்களைக்கொண்டிருந்தோம்.

இந்தப் பேரியக்கமான இந்தக் கட்சியிலிருந்து அந்தஸ்தை அடையக்கூடிய வாய்ப்புகள் எல்லோருக்கும் நிறையவே இருக்கின்றன.

அது உள்ளூராட்சி சபைகளிலே, மாகாண சபையிலே, நாடாளுமன்றத்திலே என்று பல்வேறு அந்தஸ்துகளை அடையக்கூடிய வாய்ப்புகள் திறந்தே இருக்கின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு உருவாகியிருக்கிற உற்சாகம்தான் இலங்கையில் ஸ்ரீங்கா முஸ்லிம் காங்கிரஸின் அந்தஸ்தை நாடாளுமன்றத்திலே பிரகாசிக்கச் செய்யும்.

மட்டக்களப்பில் முஸ்லிம் காங்கிரஸைத் தவிர, வேறு கட்சிகளில் போட்டியிடும் எவருக்கும் மட்டக்களப்பில் முஸ்லிம் நாடாளுமன்ற ஆசனம் இல்லையென்பது உறுதியாகிவிட்டது.

மட்டக்களப்பில் முன்னர் அதிகூடிய 52 ஆயிரம் வாக்குகள் பெற்ற வரலாற்றுச் சாதனையை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மீண்டும் நிரூபிக்கும் - என்றார்.



# பெறுமதி சேர்க்கப்பட்ட பொருட்கள் ஏற்றுமதிக்கு முன்னுரிமை

## -ஜனாதிபதி விவசாயிகளிடம் தெரிவிப்பு

விவசாயப் பொருட்களை ஏற்றுமதிசெய்யும் போது பெறுமதி சேர்க்கப்பட்ட பொருட்களுக்கு முன்னுரிமையளித்து அதிக இலாபம் ஈட்டுவதற்கு முயற்சிக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விவசாயிகளிடம் தெரிவித்தார்.

பொதுஜன முன்னணியில் பொதுத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் வெற்றியை உறுதிப்படுத்துவதற்காக நேற்று இரண்டாவது நாளாகவும் கண்டி மாவட்டத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு ஹசலக்கவில் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.



மேலும் தெரிவித்த அவர்,

மிளகு மீளேற்றுமதி முழுமையாக நிறுத்தப்பட்டுள்ளது. எனவே, விதைகள், தூள் அல்லது வேறாக்கப்பட்ட பொருட்களாக பொதியிடப்பட்ட மிளகை ஏற்றுமதிசெய்ய வேண்டும். பெறுமதிசேர்க்கும் முறைமையை பின்பற்றுவதன் மூலமே அதிக அந்நிய செலாவணியை ஈட்டமுடியும்.

இடைத்தரகர்களிடம் அகப்பட்டுவிடாது நெல் அறுவடைகளை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டு விலைக்கு வழங்குங்கள். காட்டுயானைகளின் பிரச்சினைகளுக்குத் தீர்வை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என்றார்.

மேலும், மினிப்பே பிரதேசவாசிகள் முகங்கொடுத்துள்ள குடிநீர்ப் பிரச்சினை குறித்தும் கவனம் செலுத்துவதாகக் கூறினார்.

இதன்போது, ஆசிரியர் பற்றாக்குறை மற்றும் க.பொ.த. உயர்தரம் வரை கல்வி கற்பதற்கான வசதிகளைக்கொண்ட பாடசாலை ஒன்று ஹசலக்க பிரதேசத்தில் இல்லாமையினால் பிள்ளைகள் எதிர்நோக்கும் கஷ்டங்கள் குறித்தும் பிதேச மக்கள் ஜனாதிபதியிடம் தெரிவித்தமையும் குறிப்பிடத்தக்கது.

**நாவலப்பிட்டியில்...**

நாவலப்பிட்டி நகருக்கு கடந்த வெள்ளிக்கிழமை வருகை தந்திருந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு, பொதுமக்கள் உற்சாகமாக வரவேற்பளித்தனர். அத்துடன், பொதுமக்களுடன் சிநேகபூர்வமாக கலந்துரையாடிய ஜனாதிபதி, அவர்களின் குறைநிறைகளையும் கேட்டறிந்தார்.

எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணியின் கீழ் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் ஜனாதிபதி மாவட்டந்தோறும் பிரசாரப் பயணத்தில் ஈடுபட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. இதன்படி, நாவலப்பிட்டி ஜயதிலக்க மைதானத்தில் வந்திறங்கிய அவர், சர்வமத வழிபாட்டில் பங்கேற்றபின்னர், மக்களை சந்தித்தார்.

நாவலப்பிட்டி பஸ் நிலையத்தில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி மக்கள் திரண்டிருந்தனர். ஜனாதிபதியை கண்டதும் 'ஜனாதிபதி வாழ்க, ஜனாதிபதி வாழ்க' என கோஷம் எழுப்பி தமது ஆதரவையும் வெளிப்படுத்தியிருந்தனர். இதன்பின்னர் பலர் ஜனாதிபதியுடன் இணைந்து புகைப்படம் எடுத்துகொண்டமையும் சிறப்பம்சமாகும்.

**கண்டியில்...**

கண்டி மாவட்ட வேட்பாளர் பாரத் அருள்சாமியின் தலைமையில் இடம்பெற்ற ஜனாதிபதியின் வருகை நிகழ்வில் அலைகடலென திரண்ட கண்டி வாழ் தமிழ்பேசும் மக்களைக் கண்டு நீங்கள் நிச்சயம் வெற்றிபெறுவீர்கள் என பாரத் அருள்சாமிக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நம்பிக்கையளித்தார்.

நாடாளுமன்றத் தேர்தலில் கண்டி மாவட்டத்தில் அரசாங்கத்தின் சார்பில் களமிறங்கியுள்ள ஒரேயொரு தமிழ் வேட்பாளரான பாரத் அருள்சாமியின் வெற்றியை உறுதிப்படுத்தும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை கண்டி, கலஹா குரூப் மைதானத்தில் இடம்பெற்றது. ஆட்சியிலிருக்கும் அரசாங்கத்தின் சார்பில் கண்டிவாழ் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தி தமிழ் வேட்பாளரொருவர் களமிறங்கியுள்ளதால் அவருடைய வெற்றியை உறுதிப்படுத்தும் நோக்கில் கண்டி வாழ் தமிழ்பேசும் மக்களும் அக்கூட்டத்தில் அலைகடலென திரண்டிருந்தனர்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ,

பாரத் அருள்சாமியுடன் இணைந்து மக்களின் பிரச்சினைகளை கேட்டறிந்துகொண்ட ஜனாதிபதிக்கு மக்களின் அமோக வரவேற்பு கிடைத்தது. இதனைத் தொடர்ந்து, சமூக வலைத்தளம், இணையதளம், மக்களின் நேரடி கருத்துகளினூடாக பெற்றுக்கொண்ட கண்டி வாழ் மக்களின் அபிலாஷைகள் மற்றும் பிரச்சினைகளை உள்ளடக்கிய அறிக்கையொன்றையும் பாரத் அருள்சாமி கையளித்தார்.

அறிக்கையை பெற்றுக்கொண்ட ஜனாதிபதி, நீங்கள் நிச்சயம் வெற்றிபெறுவீர்கள் என பாரத் அருள்சாமிக்கு உறுதியளித்த அவர், தேர்தலில் வெற்றிபெற்று நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டதன் பின்னர், நீங்கள் உங்களுடைய மக்களுக்காக சேவையாற்ற வேண்டும். அவர்களுடைய பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அதனை தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் அவருக்கு வலியுறுத்தினார்.

# ஜீவன் தொண்டமான் தூரநோக்குடைய சிந்தனையாளன்

## -புகழாரம் சூட்டுகிறார் கணபதி கனகராஜ்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் அமையவுள்ள பலம்வாய்ந்த அரசாங்கத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பலமாக இருந்தால்தான் எமது மக்களுக்கான தேவைகளை பூர்த்திசெய்து, சாதனைகளை படைக்கக்கூடியதாக இருக்கும். எனவே, மக்கள் பேராதரவை வழங்க வேண்டும் - என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவரும், ஊடகப் பேச்சாளருமான கணபதி கனகராஜ் தெரிவித்தார். ஹட்டனில் நேற்று ஹட்டன் நகர வர்த்தகர்களுடன் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது;

"இன்று எமது சமூகத்தின் எதிர்பார்ப்பு, இளைஞர்களின் அபிலாஷைகள் எல்லாம் வெவ்வேறான நோக்கங்கள், இலக்குகளைக் கொண்டனவாக அமைந்திருக்கின்றன. அவற்றை அடைவதற்கான வழியை காட்டுவதற்காக மலையகத்திலிருந்து புதிய தலைமைத்துவம் புறப்பட்டிருக்கின்றது. தம்பி ஜீவனின் பேச்சு, சிந்தனை என்பவற்றை பார்க்கும்போது, ஒரு சாதாரண வட்டத்துக்குள் சுழலாமல், தூரநோக்கு சிந்தனை இருப்பதை அவதானிக்க முடிகின்றது.

இன்னும் 50 வருடங்களுக்குத் தேவையான அடித்தளத்தை இந்தத் தேர்தல் போடவுள்ளது. ஒன்றுபட்டிருந்த சந்தர்ப்பங்களில் எல்லாம் நாம் வென்றிருக்கின்றோம். அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் காலத்திலும், மறைந்த தலைவர் ஆறுமுகன் தொண்டமான் காலத்திலும் இது நடைபெற்றுள்ளது. தற்போதும் மக்கள் ஒன்றுபட்டுள்ளனர். இதன் வெளிப்பாடாகவே கூட்டங்களுக்கு அணிதிரண்டு வருகின்றனர். காங்கிரஸுடன் இணைகின்றனர். பல துறைகளைச் சேர்ந்தவர்களும் ஆதரவை வெளிப்படுத்தி வருகின்றனர்.

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணியே வெற்றிபெறும். இதற்காகவே ஐந்து வேட்பாளர்களை ஆறுமுகன் தொண்டமான் நிறுத்தினார். ஐவரும் வெற்றிபெறக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது. எனவே, மக்களிடமிருந்து பெரும் ஆதரவை எதிர்பார்க்கின்றோம். அதனை மக்கள் வழங்குவார்கள் எனவும் உறுதியாக நம்புகின்றோம்" - என்றார்.

# புலமைப்பரிசில் விண்ணப்பம் கோரல்

(தலவாக்கலை)

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவுசெய்து, தொழில் வாய்ப்பு கருதி வெளிநாடு சென்றுவந்த அல்லது சென்றுள்ள பெற்றோரின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் வழங்கும் திட்டத்தின்கீழ், 2020ஆம் ஆண்டுக்கான விண்ணப்பங்கள், பின்வரும் தகைமையுடைய மாணவ, மாணவிகளிடமிருந்து கோரப்படுகின்றன. 2019ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள், 2018ஆம் ஆண்டு க.பொ.த. (சா/த) பரீட்சையில் சித்தியடைந்து உயர்தரத்தில் கற்கும் மாணவர்கள் அத்துடன், 2018 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக் கழகத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் இப்புலமைப்பரிசிலுக்கு விண்ணப்பிக்கலாம். மேற்படி, தகைமைகளை யுடைய விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 2020. 07.31ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவேண்டும். மேலதிக விபரங்களுக்கு 011-2864117 என்ற இலக்கத்துடன் மற்றும் kek என்ற இணையதளம் ஊடாகவும் விண் ணப்பங்களை பெற்றுக் கொள்ள முடியும்.



# சர்வமதத் தலைவர்களின் ஊடக சந்திப்பு

## -"வெறுக்கத்தக்க பேச்சு மற்றும் போலியான செய்திகளற்ற தேர்தல் பிரசாரம்" என்பதே தொனிப்பொருள்

(கினிகத்தேனை)

மதங்களுக்கிடையிலும், இனங்களுக்கிடையிலும் வேறுபாடு ஏற்படாதவகையில் உண்மையான ஒருவரை மக்கள் பிரதிநிதியாக தெரிவுசெய்ய வேண்டும் - என ஹட்டனில் இடம்பெற்ற "வெறுக்கத்தக்க பேச்சு மற்றும் போலியான செய்திகளற்ற தேர்தல் பிரசாரம்" என்ற தொனிப்பொருளில் இடம்பெற்ற சர்வமதத் தலைவர்களின் ஊடக சந்திப்பில் கூட்டாக வேண்டுக்கோள் விடுத்தனர்.




அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கும்போது,

"அண்மையில் தேர்தல் பிரசாரத்தின்போது மூவாயிரம் இராணுவத்தைக் கொன்றதாக தெரிவித்தபோது அது தென்னிலங்கையில் வாழ்பவர்கள் மத்தியில் கோபத்தை ஏற்படுத்தியது. அதேபோன்று தேர்தல் மேடைகளில் ஒருவருக்கொருவர் எதிர்த்து வாதங்களை முன்வைக்கின்றனர். இவை அனைத்தும் மக்களின் நலனில் எவ்விதத்திலும் உதவப் போவதில்லை.

நாங்கள் இந்நாட்டிலே இன ஒற்றுமை ஏற்பட வேண்டும், அமைதி நிலவ வேண்டும் என வேண்டுகோள் விடுக்கின்றோம். அத்துடன், தற்போது முன்னெடுக்கப்படும் தேர்தல் பிரசாரங்களை பார்க்கின்றபோது அதனை ஏற்றுக்கொள்ளமுடியாத அளவுக்கு இருக்கின்றது. அந்தவகையில் நல்ல கருத்துகளை முன்வைக்கவேண்டும்.

அத்துடன், நுவரெலியா பிரதேசத்தில் இன்று பலர் நாடாளுமன்றத்திற்கு போட்டியிடுகின்றனர். அவ்வாறு தெரிவுசெய்யப்படுபவர் மக்களின் பிரச்சினைகள் பற்றி கேட்டறிந்தவராக இருக்க வேண்டும். ஆயிரம் ரூபா சம்பள உயர்வு என்பது அப்போதைக்கு முன்வைக்கப்பட்ட ஒரு கோரிக்கை. ஆனால், அதை இன்னும் வருடக்கணக்கில் பேசிக்கொண்டு வருகின்றனர். எங்களுடைய கோரிக்கை அவர்களின் உழைப்பு மற்றும் நாளாந்த விலை உயர்வுக்கேற்ப ஊதியம் கிடைக்கவேண்டும். தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகளை வென்றெடுக்கக்கூடிய ஒரு வேட்பாளரை தெரிவுசெய்ய வேண்டும்.

தற்போது குளவிக்கொட்டு, சிறுத்தை போன்றவற்றின் தாக்கத்திற்குட்படும் நிலைக்கு மலையகச் சமூகம் மாறியுள்ள நிலையில், இவர்களுக்கான நட்டஈடுகள் கூட வழங்கப்படுவதில்லை. இப்படியாக மலையக மக்களின் பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வைப்பெற்றுத் தருபவர்களையே நாம் மக்கள் பிரதநிதிகளாக அனுப்ப வேண்டும்"- என்றனர்.

# இந்தத் தேர்தல், நேர்மைக்கும் - போலிக்கும் இடையிலான போட்டி; நேர்மையானோரை தெரிவுசெய்யவேண்டியது மக்களின் கடமை!

## -பழனி திகாம்பரம்

"நேர்மையானவர்களுக்கும், போலிகளுக்கு மிடையிலான போட்டியே இத்தேர்தலாகும். எனவே, நேர்மையானவர்களை, சேவை செய்தவர்களை தெரிவுசெய்யவேண்டியது மக்களின் கடமையாகும்" - என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட வேட்பாளருமான முன்னாள் அமைச்சர் பழனி திகாம்பரம் தெரிவித்தார்.



நல்லதண்ணி மறே தோட்டத்தின் கெடஸ் பிரிவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது,

"வில்லை எடுத்துக்கொண்டு போருக்கு போவதுபோல, இந்தத் தேர்தல் தர்ம யுத்தம் என சிலர் கூறுகின்றனர். அவ்வாறு தர்ம யுத்தம் ஒன்றும் கிடையாது. மக்களுக்கு நேர்மையாக சேவை செய்த அரசியல்வாதிகள் யார், ஏமாற்றியவர்கள் யார் என்பதை அறிந்து, நேர்மையானவர்களுக்கு வாக்களிக்கும் தேர்தலாகும்.

இத்தேர்தலில் தமிழ் முற்போக்குக் கூட்டணி நிச்சயம் வெற்றிபெறும். இதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. ஆயிரம் ரூபா பெற்றுக்கொடுப்போம் என்றார்கள் நடக்கவில்லை. ஜனாதிபதி வாங்கித் தருவார் என்றார்கள், இப்போது ஜனாதிபதியே பல்டி அடித்துவிட்டார். இதனை நாங்கள் சுட்டிக் காட்டினால், 50 ரூபா எங்கே என்று கேட்கின்றனர். அதனைப் பெறுவதற்கு அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பித்தேன். அங்கீகாரமும் கிடைத்தது. ஆனால், மலையகத்திலிருந்த அமைச்சரும், பெருந்தோட்டத்துறை அமைச்சரும் இணைந்து ஆப்புவைத்துவிட்டனர்.

எது எப்படியோ கடந்த நான்கரை வருடங்களில் மக்களுக்கு சேவை செய்துள்ளோம். எனவே, நாங்கள் தோல்வியடைந்தால் அது மக்களுக்கு ஏற்படும் தோல்வியாகும். தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை இல்லாமல் செய்வதற்கு சிலர் போட்டியிடுகின்றனர். இதற்கு அரசாங்கமும் துணைநிற்கின்றது. எமது இருப்பை தக்கவைத்துக்கொள்ள வேண்டுமெனில் எமக்கு வாக்களிக்க வேண்டும். சிலர் வாக்குகளைப் பெறுவதற்காக போலி வாக்குறுதிகளை வழங்கிவருகின்றனர். மக்கள் அதனை நம்பக்கூடாது" - என்றார்.




# மஞ்சள் தூளில் கலப்படம்: பொதுமக்கள் விசனம்!

(மஸ்கெலியா)

நகரங்களிலுள்ள சில வர்த்தக நிறுவனங்களில் விநியோகிக்கப்பட்டுவரும் மஞ்சள் தூள் பக்கட்டுகளில் கோதுமை மா கலப்படம் செய்யப்பட்டுள்ளதாக நுகர்வோர் சுட்டிக் காட்டுகின்றனர். கடந்த சில மாதங்களாக நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக மஞ்சள் தூளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டிருந்த நிலையில், அதற்கான விலையும் அதிகரித்திருந்தது. சில வர்த்தகர்கள் இதனை தமக்கு சாதகமாக பயன்படுத்தி விலையை தமக்கேற்றவாறு அதிகரித்தும், கலப்படம் செய்தும் மக்களை சுரண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்தவகையில் மஸ்கெலிய நகரில் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக சென்ற பிரதேச மக்கள் கருத்து தெரிவிக்கையில்,

"வர்த்தக நிலையமொன்றில் தாம் கொள்வனவுசெய்த 50கிராம் மஞ்சள் தூள் பக்கட்டில் பொதிசெய்யப்பட்ட மஞ்சள் தூளை சமையலுக்கு பயன்படுத்தியபோது அதன் சுவை வித்தியாசமாக காணப்பட்டதாகவும், அதனை பரிசீலனை செய்து பார்த்தபோது அதில் கோதுமை மா கலப்படம் செய்யப்பட்டுள்ளமையும் தெரியவந்துள்ளது.



மேலும், குறித்த மஞ்சள் தூளின் நிறமும் வழமையாக வாங்கும் மஞ்சள் தூளைவிட வித்தியாசமாக காணப்பட்டதாகவும் சுட்டிகாட்டியுள்ளனர்.

மேலும், குறித்த மஞ்சள் தூள் பொதிசெய்யப்பட்ட நிறுவனத்தின் பெயர் பதிக்கப் பட்டிருக்கவில்லை. 50கிராம் மஞ்சள் தூளின் விலை 150 ரூபா என்பதும் குறிப்பிடத்தக்கது. எனவே, இது குறித்து நுகர்வோர் பாதுகாப்புப் பிரிவினர் மற்றும் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க முன்வரவேண்டும்"- என பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# வலையில் சிக்கியது சிறுத்தை; கெனில்வத்தையில் சம்பவம்

(நோட்டன் பிரிட்ஜ்)

கினிகத்தேனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கெனில்வத்தை தோட்டப் பகுதியில் வலையில் சிக்குண்ட நிலையில், சிறுத்தையொன்று பிரதேச மக்களால் நேற்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது குறித்து வனவிலங்கு காரியாலயம் மற்றும் பிரதேச பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து, குறித்த இடத்திற்கு வந்த நல்லதண்ணி வனவிலங்கு காரியாலய அதிகாரி பிரபாத் கருணாதிலக்க சிறுத்தையை உயிருடன் பிடிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவித்தார்.



கெனில்வத்தை தோட்டக் குடியிருப்பை அண்மித்த தேயிலை மலைப்பகுதியில் மிருக வேட்டைக்காக விரிக்கப்பட்டிருந்த கம்பி வலையில் சிக்குண்ட நிலையிலிருந்த சிறுத்தையே இவ்வாறு பிரதேச மக்களால் கண்டுபிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும், வலையில் சிக்குண்ட சிறுத்தையை மயக்க ஊசியேற்றி பிடிக்க நடவடிக்கை எடுத்து வருவதாக வனவிலங்கு காரியாலய அதிகாரி மேலும் தெரிவித்திருந்தார்.

# அப்புத்தளையில் விபத்துக்குள்ளான சிறுத்தைப்புலி பலி!

(அப்புத்தளை)

அப்புத்தளை – யாகலபெத்த வழியில் விபத்தொன்றில் சிக்கிய சிறுத்தைப் புலி பரிதாபகரமாக பலியான சம்பவமொன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

யாகலபெத்த பெருந்தோட்டப் பகுதியிலிருந்து தப்பியோடிவந்த சிறுத்தைப் புலி பாதையில் சென்ற வாகனமொன்றில் மோதி பலியானது.

இச்சிறுத்தைப் புலி இரண்டரை அடி நீளமானதென்பது குறிப்பிடத்தக்கது. இது குறித்து அப்பகுதி மக்கள் அப்புத்தளை பொலிஸாருக்கும் வனஜீவராசிகள் திணைக்களத்தினருக்கும் அறிவித்தனர்.



இதையடுத்து, சம்பவ இடத்திற்கு வருகைதந்த அவர்கள் பலியான சிறுத்தையை மீட்டுச்சென்றனர். சிறுத்தைப் புலி மீது மோதிய வாகனம் குறித்து இதுவரையிலும் எவ்வித தகவலும் கிடைக்காத நிலையில், பொலிஸாரும் வனஜீவராசிகள் திணைக்களத்தினரும் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நான் கடந்த 8 ஆண்டுகளாக கூறிவந்த விடயத்தை தற்போது சுமந்திரன் ஏற்றுக்கொண்டிருக்கின்றார்

## தமிழர் விடுதலைக் கூட்டணியின் வேட்பாளர் அருண் தம்பிமுத்து

நான் கடந்த 8 ஆண்டுகளாக கூறிவந்த விடயத்தை தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் ஏற்றுக்கொண்டிருக்கின்றார் - என தமிழர் விடுதலைக் கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்ட முதன்மை வேட்பாளர் அருண் தம்பிமுத்து தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு கல்லடியில் அவரது கட்சியின் தேர்தல் அலுவலகத்தை திறந்துவைத்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது சுமந்திரன் பேரம்பேசி அமைச்சுப் பதவி எடுப்பதற்கு சந்தர்ப்பத்தைத் தாருங்கள் என தமிழ் மக்களிடம் கேட்கின்றார். இதைத்தான் நான் கடந்த 8 வருடங்களாக மட்டக்களப்பு மாவட்ட தமிழ் மக்களிடம் பேசிவந்துள்ளேன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் தற்போது அதனை ஏற்றுக்கொண்டுள்ளார். தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் 50ஆயிரம் இளைஞர், யுவதிகள் வேலைவாய்ப்பற்று இருக்கின்றார்கள்.



இதனை அரசியல்வாதிகள் உணர வேண்டும். நாங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தவேண்டும். எந்தக் கட்சி வந்தபோதிலும், மக்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லை. ஊழல்மிக்க ஆட்சி கடந்த 10 வருடங்களாக தொடர்ந்திருக்கின்றது. 40 ஆயிரம் கோடி பணம் மட்டக்களப்பு மாவட்டத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதற்குப் பின்னர் எதுவித தொழிற்சாலையோ அபிவிருத்தியோ மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெறவில்லை. அபிவிருத்தியென்றால் இளைஞர், யுவதிகளின் வாழ்வாதாரம்தான் என்பதை நாங்கள் நன்குணர்ந்தவர்கள். வருடாந்தம் தீபாவளிக்குள் தீர்வு வந்துவிடும், வந்துவிடும் எனக் கூறினார்களேயன்றி இன்னும் எமது மக்கள் தீர்வைக் காணவில்லை.

இந்நிலையில்தான் உதயசூரியன் பல வருடங்களுக்குப் பின்னர் இம்முறை மட்டக்களப்பில் மீண்டும் உதிக்கும் என்பதில் மாற்றமில்லை. மட்டக்களப்பு மக்கள் ஒரு மாற்றத்தை எதிர்பார்க்கின்றார்கள். அந்த மாற்றத்தின் அடையாளமாக நாங்கள் திகழ்வோம். அதற்கான வழிவகைகளை முன்வைக்கவுள்ளோம். எமது தேர்தல் விஞ்ஞாபனம் மிக விரைவில் வரவுள்ளது. யுத்தம் முடிவுற்று கடந்த 10 ஆண்டுகாலமாக ஒரு மாற்று அரசியல் இல்லாமலுள்ளது. இங்குள்ள ஊடகவியலாளர், வேட்பாளர்களை அழைத்து மக்கள் முன் விவாதத்திற்கு ஏற்பாடுசெய்யுங்கள், அதற்கு நாங்கள் தயாராகவிருக்கின்றோம். இந்த அழைப்பை அனைத்து வேட்பாளரர்களிடமும் கேட்கின்றேன் - என்றார்.

# தேர்தல் தொடர்பில் 38 முறைப்பாடுகள்

## கிழக்கு பிரதித் தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

(கிண்ணியா )

நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் தொடர்பில் இதுவரை 38 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக கிழக்கு மாகாண பிரதித் தேர்தல் ஆணையாளர் எஸ்.சுதாகரன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

சட்டத்தை மீறல் மற்றும் முறைப்பாடுகளை பதிவுசெய்ய 0262222352என்ற தொலைபேசி இலக்கம் மூலம் அல்லது 0765318905 என்ற வட்ஸ்அப்ஃவைபர் இலக்கங் களூடாக மேற்கொள்ளமுடியும். அத்துடன், 15,200 வாக்காளர்கள் தபால் வாக்காளர்களாக வாக்களிக்க தகுதிபெற்றுள்ளார்கள். எதிர்வரும் 13ஆம் திகதி சுகாதாரத்துறையினரும் (சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக அலுவலர்கள்)14ஆம், 15ஆம் திகதிகளில் ஏனைய அரச உத்தியோகத்தர்களும் 16ஆம்,17ஆம் திகதிகளில் மாவட்ட செயலகம், முப்படை மற்றும் பொலிஸ் திணைக்கள உத்தியோகத்தர்களும் தபால் வாக்குகளைப் பதிவுசெய்ய முடியும் என்றும் தெரிவித்தார்.

அத்துடன், இம்முறை வாக்கெண்ணும் நிலையமாக திருகோணமலை விபுலானந்தாக் கல்லூரி செயற்படவுள்ளது.

வாக்களிப்பதற்கு தேசிய அடையாள அட்டை, செல்லுபடியான கடவுச்சீட்டு,செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம், அரச ஓய்வூதிய அடையாள அட்டை, முதியோர் அடையாள அட்டை, ஆட்களை பதிவுசெய்யும் திணைக்களத்தால் விநியோகிக்கப்படும் மதகுருமார்களுக்கான அடையாள அட்டை மற்றும் 2019 ஜனாதிபதித் தேர்தலில் தேர்தல் ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட தற்காலிக அடையாள அட்டையை தாங்கள் வதிந்துள்ள பிரிவின் கிராம அலுவலரிடம் ஒப்படைத்து புதுப்பித்த அடையாள அட்டை என்பன ஏற்றுக்கொள்ளப்படும் என்றும், மேற்குறித்த அடையாள அட்டையற்றவர்கள் வாக்களிக்க தேர்தல் ஆணைக்குழுவின் தற்காலிக அடையாள அட்டையை தாமதமின்றி பெறல் வேண்டும்.

இதற்காக 2 சென்றிமீற்றர் அகலத்தையும் 3 சென்றிமீற்றர் உயரத்தையும் கொண்ட வர்ண அல்லது கறுப்பு, வெள்ளை புகைப்படப் பிரதிகள் இரண்டுடன் தங்களது கிராம அலுவலரை சந்தித்தல் வேண்டும். தற்காலிக அடையாள அட்டைகள் கிராம அலுவலரால் ஏற்கப்படும் இறுதித்திகதி ஜூலை 29 ஆகும்.

அத்துடன், தெளிவற்ற அடையாள அட்டைகள், அமைச்சு, திணைக்களங்கள், அரச நிறுவனங்களால் விநியோகிக்கப்பட்ட அலுவலக அடையாள அட்டைகள் மற்றும் தேசிய அடையாள அட்டைகளுக்கு விண்ணப்பிக்கும்போது வழங்கப்படும் பற்றுச்சீட்டு போன்ற புகைப்படத்துடன் கூடிய அல்லது புகைப்படமற்ற வேறெந்த ஆவணமும் வாக்கெடுப்பு நிலையத்தில் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாதென்றும் பிரதித் தேர்தல் ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.




# வம்மியடியூற்றுப் பகுதியில் கசிப்பு தயாரித்த நபர் கைது

மட்டக்களப்பு மாவட்டம் வெல்லாவெளியில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வம்மியடியூற்றுப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டிருந்த நிலையில், ஒருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளதுடன், உற்பத்தி செய்யப்பட்ட கசிப்பையும் கைப்பற்றியுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:

வம்மியடியூற்றுப் பகுதியில் சட்டவிரோதமாக கசிப்பு உற்பத்தி நடவடிக்கைகள் நடப்பதாக அப்பகுதி கிராமசேவகருக்குக் கிடைத்த தகவலையடுத்து, கிராமசேவகர் சகிதம் வெல்லாவெளி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆனந்தசிறி உள்ளிட்ட குழுவினர் கடந்த சனிக்கிழமை மேற்கொண்ட நடவடிக்கையின்போது சட்டவிரோதமான முறையில் கசிப்பு உற்பத்திசெய்துகொண்டிருந்த ஒருவரை பொலிஸார் கையுமெய்யுமாக பிடித்துள்ளதுடன், கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தும் பொருட்களையும் பறிமுதல்செய்துள்ளனர்.

அண்மைக்காலமாக சட்டவிரோதமான முறையில், கசிப்பு மற்றும் கோடா உற்பத்திகள் அதிகரித்துள்ளதோடு, பொலிஸார் கிராமசேவை உத்தியோகத்தர்கள், சிவில் பாதுகாப்புக் குழுக்கள் மற்றும் பொது அமைப்புகள் ஒன்றிணைந்து அவற்றைக் கைப்பற்றி வருவதும், சந்தேகநபர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தககதாகும்.

# கருணா அம்மான் என்னை தோற்கடித்து முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை இல்லாமலாக்க முயற்சிக்கின்றார்

## முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர் ஹரீஸ் குற்றச்சாட்டு

கருணா அம்மான் என்னை தோற்கடித்து முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை இல்லாமல்செய்ய முயற்சிக்கின்றார் - என அம்பாறை திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தி சார்பாக போட்டியிடும் முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர் ஹரீஸ், விசேட செய்தியாளர் மாநாடொன்றில் கலந்துகொண்டபோது தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவித்ததாவது:

தேர்தல் பிரசாரம் என்ற போர்வையில் கருணா அம்மான் தமிழ் - முஸ்லிம் மக்களிடையே பிளவுகளை ஏற்படுத்தும் வண்ணம் செயற்பட்டு வருகின்றார். அவரது பிரசாரத்தில் அண்மையில் முஸ்லிம்களை வந்தேறு குடிகள் என விழித்து கருத்துகளை தெரிவித்திருந்தார். ஆனால், கருணாதான் அம்பாறை மாவட்டத்தின் அரசியல் வந்தேறிகுடியாவார். 46 வீதம் வாழும் முஸ்லிம் மக்களின் அடையாளம் எமது அம்பாறை மாவட்டமாகும். எனவே, பல இடங்களில் முஸ்லிம்களை இவர் தலைமையிலான புலிகளே கடந்த காலங்களில் கொன்றிருந்தார்கள். காத்தான்குடி, கல்முனை, அக்கரைப்பற்று, பொத்துவில், மூதூர் போன்ற பகுதிகளில் முஸ்லிம் மக்கள் கொன்று குவிக்கப்பட்டனர்.

கருணா அம்மான், கல்முனை



தொகுதியில் என்னை தோற்கடித்து கல்முனை நகரத்தைக் கைப்பற்றலாம் என பகல் கனவு காண்கின்றார். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கி ரஸின் பிரதித் தலைவர் என்ற ரீதியில் என்னுடன் கரம்கோர்க்கும் சகல பிரதேச மக்களும் கல்முனை நகர் பாது காக்கப்பட வேண்டும், அந்தப் பகுதியின் கல்முனை தொகுதி பிரதிநிதித்துவம் பாதுகாக்கப்பட வேண்டும் என எம் முடன் இணைந்துள்ளனர். எனவே, கோடிஸ்வரன், கருணா அம்மான், வியாழேந்திரன் ஆகியோர் இத்தேர்தலில் தோற்கடிக்கப்பட வேண்டும் - என்றார்.

அத்துடன், கருணா என்பவரை சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்தவேண்டும். கடந்த காலங்களில் சஹ்ரானின் தாக்குதலை பயன்படுத்தி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான கோடீஸ்வரன், வியாழேந்திரன் உட்பட ஞானசார தேரர் போன்றோர் கல்முனை தரமுயர்த்தல் தொடர்பிலான உண்ணாவிரதம் இருந்த காலத்தில் அதனை தோற்கடிக்க முயற்சி செய்தனர். ஆனால், மக்களின் ஆதரவுடன் அதை முறியடித்து வெற்றிகண்டோம். கருணா, கோடீஸ்வரன் போன்றோர் கல்முனை பிரச்சினையை முன்வைத்து அம்பாறையில் வெல்ல முடியாது. முஸ்லிம் சமூகம் வெல்லவேண்டுமென்றால் அம்பாறையை நாம் வெல்லவேண்டும்.

இன்று கல்முனையைபோன்று பொத்துவில் மக்களும் அழுதுகொண்டிருக்கிறார்கள். புதிய அரசாங்கமும் அதன் தலைமைகள் வெல்லவேண்டும் என தற்போது அடக்குமுறையை கையாள்கின்றது. அதேபோன்று, முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் என்பவர் அம்பாறை மாவட்டத்தை தற்போது கைவிட்டுவிட்டார். அவர் பல்வேறு இடங்களில் பல்வேறுவிதமாக பேசி வருகிறார். என்னை தோற்கடிப்பதற்காக மூன்று வேட்பாளர்களை எனது தொகுதியில் களமிறக்கியுள்ளார். எவ்வாறிருந்தபோதிலும் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ தற்போது சஜித் பிரேமதாஸவிடம் தன்னை சந்திக்க வரும்போது ரிஷாட் பதியூதீனை அழைத்து வரவேண்டாம் என்று கூறுகின்றார். மேலும், இவரின் அமைச்சுப் பதவியை கடந்த காலங்களில் பறிக்க வேண்டும், துறக்க வேண்டும் என பௌத்த துறவிகள் உண்ணாவிரதம் இருந்தபோது நாங்களும் பதவியை துறந்து பக்கபலமாக இருந்தோம். இதனை மறந்து இன்று கருணாவுடன் இணைந்து கல்முனையை பறிகொடுக்க துணிந்து செயற்பட்டு வருகின்றார் என குற்றஞ்சாட்டினார்.

# மட்டக்களப்பில் ஊடகவியலாளர்கள் ஆர்ப்பாட்டம்

கொழும்பில் ஊடகவியலாளருக்கு அச்சுறுத்தல் விடுத்தமையைக் கண்டித்தும் ஊடகவியலாளர்களின் சுதந்திரம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும் எனத் தெரிவித்தும் மட்டக்களப்பில் கடந்த சனியன்று கண்டன ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றது.

கொழும்பு மேல் நீதிமன்ற வளாகத்தில் புகைப்பட ஊடகவியலாளர் ஒருவரின் ஊடகப்பணிக்கு இடையுறு விளைவித்ததுடன், அவருக்கு அச்சுறுத்தல் விடுத்ததைக் கண்டித்துமே இந்த கண்டன ஆர்ப்பாட்டமும் கவனயீர்ப்புப் போராட்டமும் இடம்பெற்றன.





கிழக்கு மாகாண தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட ஊடகவியலாளர்கள் இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடுசெய்திருந்தனர்.

மட்டக்களப்பு நகரின் காந்திப்பு பூங்காவுக்கு எதிரே இடம் பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் மட்டக்களப்பு மாவட் டத்திலுள்ள தமிழ், முஸ்லிம் ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டனர்.

# வறுமை ஒழிப்புத்திட்டங்களை பார்வையிட கொரிய நாட்டுக்குழு மட்டக்களப்பு விஜயம்

( மட்டக்களப்பு )

இலங்கை அரசாங்கமும் கொரிய அரசாங்கமும் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்திற்கமைய உலக உணவுத் திட்டத்தின் அங்கீகாரத்தில் சுமார் 120 கோடி ரூபா நிதி ஒதுக்கீட்டில் வறுமைக்கோட்டின்கீழ் வாழும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த ஐந்து மாவட்டங்களில் வறுமை ஒழிப்புத்திட்டங்களின் முன்னேற்றங்கள் மற்றும் எதிர்காலத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள திட்டங்களின் சாத்திய செயற்பாடுகளை நேரில் கண்டறிய இலங்கை வந்துள்ள கொரிய நாட்டு பிரதிநிதிகள் குழு கடந்தவாரம் விஜயம் மேற்கொண்டிருந்தது.

இக்குழுவினர் முதலில் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்திற்கு வருகைதந்து மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா தலைமையில் இடம் பெற்ற விசேட கூட்டத்தின்போது இம்மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்களின் முன்னேற்றங்கள் மற்றும் ஏனைய இம்மாவட்ட தேவைகள் எதிர்காலத்தில் அமுல்படுத்த தீர்மானித்துள்ள வாழ்வாதாரத் திட்டங்கள் பற்றியும் கலந்துரையாடினர்.

இதன்பின்னர் இந்த விசேட திட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட வவுணதீவு பிரதேச செயலகப் பிரிவின் பன்சேனை, காஞ்சிரங்குடா, பாவக்கொடிச்சேனை ஆகிய கிராமங்களுக்கு கள விஜயம் மேற்கொண்டு அங்கு நடைமுறைப்படுத்தப்பட்ட மற்றும் புதிதாக ஆரம்பிக்கவுள்ள திட்டங்களின் முன்னேற்றங்களையும் ஏனைய தேவைகளையும் அவ்வப்பகுதி மக்களிடமும் திணைக்கள அதிகாரிகளிடமும் கேட்டறிந்தும் கொண்டனர்.

மேற்படி கள விஜயத்தில் உலக உணவுத் திட்டத்தின் வதிவிடப் பணிப்பாளர் திருமதி பிரெண்டா வேர்டன் கொய்கா சர்வதேச தொண்டர் அமைப்பின் வதிவிடப் பணிப்பாளர் திருமதி யுன்ஹூ வாகங், விவசாய அமைச்சின் அபிவிருத்திப் பணிப்பாளர் திருமதி சம்பிகா, கிழக்கு மாகாண விவசாய திணைக்களப் பணிப்பாளர் எம்.ஐ.ஹுசைன், மட்டக்களப்பு பிரதிப் பணிப்பாளர் வீ.பேரின்பராஜா, வவுணதீவு பிரதேச செயலாளர் எஸ்.சுதாகரன், உலக உணவுத் திட்டத்தின் அரச பங்காளி இணைப்பு உத்தியோகத்தர் முஸ்தபா நிஹ்மத், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஆர்.ஜதீஸ்குமார் உட்பட பல அதிகாரிகள் பங்கேற்றனர்.





தற்பொழுது துரிதமாக முன்னெடுத்துச் செல்லப்படும் இந்த விசேட திட்டத்தின்கீழ் மட்டக்களப்பு, மொனராகல, மாத்தளை, மன்னார், முல்லைத்தீவு ஆகிய ஐந்து மாவட்டங்களில் இலங்கை அரசாங்கத்தின் நிதி, சுமார் 36 கோடி ரூபாவிலும் கொரிய நாட்டு அரசாங்கத்தின் உதவியில் சுமார் 108 கோடி ரூபாவிலுமாக மொத்தம் சுமார் 144 கோடி ரூபா செலவில் வறுமைக்கோட்டின்கீழ் வாழும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் ஜீவனோபாயம் சார்ந்த திட்டங்களும் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன.

இதற்கமைய மட்டக்களப்பு மாவட்டத்தின் வறுமைக்கோட்டின்கீழ் கூடுதலான மக்கள் வாழும் பிரதேசமான மண்முனை மேற்கு, வவுணதீவு பிரதேச செயலகப் பிரிவில் 2019 ஆண்டு முதல் தெரிவுசெய்யப்பட்ட 10 கிராமங்களில் வறிய மக்களுக்கான அடிப்படை வசதிகள் மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் ஜீவனோபாயத் திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா தெரிவித்தார்.

இந்த விசேட திட்டத்திற்கு கடந்த வருடம் இப்பிரதேச செயலகப் பிரிவின் பன்சேனை, காஞ்சிரங்குடா, குறுஞ்சாமுனை ஆகிய கிராமங்களும் இவ்வருடம் பாவக்கொடிச்சேனை, இலுப்படிச்சேனை, புதுமண்டபத்தடி ஆகிய கிராமங்களும் அடுத்த வருடம் 2021இல் ஆயித்தியமலை வடக்கு, நெடியமடு, காந்திநகர் விளாவெட்டுவான் கிராமங்களும் உள்வாங்கப்பட்டிருப்பதாக மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பத்மராஜா மேலும் தெரிவித்தார்.

இதுவரையில் இப்பிரதேச செயலாளர் பிரிவில் விவசாய செய்கைக்கு பிரயோசனமான சிறிய நீர்ப்பாசனக் குளங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன், குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க நான்கு குடிநீர்க் கிணறுகளும் நிறுவப்பட்டுள்ளதுடன், மேலும் பல உட்கட்டமைப்பு வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அச்சிடல் முறைமை மற்றும் விநியோக முறைமை முற்றிலும் சுகாதார தன்மைமிக்கது. 'தமிழன்' பத்திரிகை உங்கள் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தியே தினமும் உங்களை வந்தடைகிறது.



# சில அதிகாரிகளினால் பொலிஸ் திணைக்களத்திற்கு அவப்பெயர்: அதனை நீக்க மேற்கொண்டுள்ள செயற்பாடுகள் உத்வேகத்தை தருகின்றன!





## -பிரதமர் மஹிந்த -

பாதாள உலகக் குழுவினரின் செயற்பாடு மற்றும் போதைப்பொருள் அச்சுறுத்தல் காரணமாக பொலிஸ் திணைக்களத்தினுள் ஏற்பட்டுள்ள அவப்பெயரை நீக்கிக் கொள்வதற்காக பொலிஸார் மேற்கொண்டுள்ள கடுமையான செயற்பாடு சமூகத்திற்கு பாரிய தைரியமாகும் - என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைவர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் சில அதிகாரிகள் போதைப்பொருள் கடத்தலுக்கு தொடர்புப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளமை தொடர்பில் கருத்து வெளியிட்ட பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். கடந்த சனிக்கிழமை மாலை அக்குரஸ்ஸ பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே பிரதமர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறியதாவது;

போதைப்பொருள் அச்சுறுத்தலில் எதிர்கால சந்ததியினரை காப்பாற்றுவதற்காக ஒரே தேசம் என்ற ரீதியில் இணைந்து செயற்படவேண்டியுள்ளது. ஜனாதிபதி இதற்காக மேற்கொள்ளும் வேலைத்திட்டத்தை நாடாளுமன்றத்திற்குள் செயற்படுத்த ஆரம்பித்த பின்னரே தொடர்ந்து அது வலுவடையும்.

பொலிஸ் திணைக்களத்தினுள் ஊழல் அதிகாரிகள் சிலரின் செயற்பாடுகள் காரணமாக முழுமையான திணைக்களத்தின் அதிகாரிகளை சிரமத்திற்குள்ளாக்குவதற்கு அரசாங்கம் என்ற ரீதியில் எந்தச் சந்தர்ப்பத்திலும் செயற்பட மாட்டோம்.

இதன் காரணமாக சட்டத்தை மதிக்கும் சமூகமொன்றை எதிர்காலத்தில் உரிமையாக்கிக்கொள்வதற்காக பாதாள உலகக் குழுவினர் மற்றும் போதைப்பொருள் கடத்தலை கட்டுப்படுத்தி நாட்டைக் காப்பாற்றும் அரசாங்கத்தின் செயற்பாட்டில் இணைய வேண்டும் - என்றும் பிரதமர் பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

# இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணம் வந்தவர்கள் சிக்கினர்: கொரோனா அறிகுறியுடன் ஒருவர் சிகிச்சைக்காக சேர்ப்பு!



இந்தியாவிலிருந்து கடல் மார்க்கமாக சட்டவிரோதமாக யாழ்ப்பாணம் நுழைய முயன்ற 4 பேர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டிருந்தனர். அவர்களில் ஒருவர் கொரொனா அறிகுறிகளுடன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தொண்டமானாறுக்கு வடக்கே 11 கடல் மைல் தொலைவில் இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் காலை சந்தேகத்திற்கிடமான டிங்கி படகொன்றை கடற்படையினர் அவதானித்து அதை சோதனையிட்டபோது 4 பேரும் கைதாகினர்.

வடமராட்சியைச் சேர்ந்த மீனவர்களான இருவர், இந்தியாவின் தமிழகத்தில் தங்கியிருந்த இருவரை கடல் மார்க்கமாக நாட்டுக்கு அழைத்து வந்துள்ளனர்.

வல்வெட்டித்துறை, முல்லைத்தீவைச் சேர்ந்த இருவரே இந்தியாவிலிருந்து திரும்பியுள்ளனர்.

முன்னாள் போராளியொருவரே மார்பு வலி, மூச்சுத்திணறல் போன்ற கொரோனா அறிகுறிகளுடன் வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளார். அவர் யுத்தக்களத்தில் காலொன்றையும் இழந்தவர். கைதானவர்கள் 21 வயது முதல் 52 வயதிற்கிடைப்பட்டவர்கள்.

அவர்கள் தனிமைப்படுத்தப்பட்ட பின்னர் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

# குறைகூறும் அரசியல் - ஒற்றுமையின்மை மலையக பின்னடைவுக்கான காரணங்கள்

## - கூறுகிறார் ஜீவன் தொண்டமான் -



"ஒற்றுமையின்மை மற்றும் குறைகூறும் அரசியலாலேயே எமது மலையகம் 30 ஆண்டுகள் பின்தங்கிய நிலையிலுள்ளது. ஆனால், எமது சமூகம் அடுத்துவரும் காலப்பகுதியில் எவ்வாறு இருக்கவேண்டும் என்பது தொடர்பில் என்னிடம் தெளிவான வேலைத்திட்டங்கள் உள்ளன. எனவே, மக்கள் ஒத்துழைப்பு வழங்கும் பட்சத்தில் நிச்சயம் மாற்றத்தை ஏற்படுத்தலாம்" - என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், நுவரெலியா மாவட்ட வேட்பாளருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

அட்டனில் நேற்றுமுன்தினம் இரவு நகர வர்த்தகர்களுடனான பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"தம்மைத்தாமே அரசியல் ஜாம்பவான்கள் எனக் கூறிக்கொள்ளும் சில அரசியல்வாதிகள், கடந்தகாலம் முழுவதும் ஆயிரம் ரூபா தொடர்பில் குறைகூறியே ஏனைய பிரச்சினைகளை மூடி மறைத்தனர். இன்று படித்த இளைஞர்கள் இருக்கின் றனர். அவர்களுக்கு கல்விக்கேற்ப வேலை இல்லை. அதேபோல், சொந்தக்காலில் நிற்பதற்கு முயற் சிக்கும் இளைஞர்களுக்கு சுயதொழில் வாய்ப்புகளும் இல்லை. மலையக மக்களுக்கு தோட்டத் தொழிலை தவிர, வேறு எதுவும் தெரியாது என சிலர் நினைத்துக்கொண்டிருக்கின்றனர். இந்நிலைமையை மாற்றவேண்டும்.

மலையகத்தில் நகரப்பகுதிகளில் கூலி வீடுகளில் வாழ்பவர்களுக்கான வீட்டுத்திட்டத்தை முன்னெடுப்பது தொடர்பிலும் எனது தந்தை திட்டமிட்டிருந்தார். ஆனால், அவரை விமர்சித்தனர். இன்று என்னை விமர்சிக்கின்றனர். இவர்களால்தான் மலையகத்துக்கு போதைப்பொருள் வந்தது எனக்கூறி கீழ்த்தரமான அரசியலை நடத்துவதற்கு நான் விரும்பவில்லை. போதைப்பொருட்களை ஒழிப்பதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தி மலையகத்தில் அதனைத் தடுப்போம்.

ஹட்டன் சந்தை - ஹட்டனின் அடையாளம். அதனை திருத்தி அழகுப்படுத்தினால்போதும். ஹட்டனில் மேலும் பல திட்டங்கள் முன்னெடுக்கப்படும். நிச்சயம் ஹட்டனை மலையகத் தமிழர்களின் தலைநகராக மாற்றலாம். நாம் ஆளுங் கட்சியில் இருக்கின்றோம். எனவே, எமக்கு வாக்களித்தால்தான், எமது மக்கள் வாக்களித்துள்ளனர் எனக்கூறி பேரம்பேசி, மக்களுக்கான தேவைகளை இலகுவில் நிறைவேற்றிக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

இது என்னுடைய மலையகம். நீங்கள் என்னுடைய மக்கள். எனவே, இன்னும் 20 ஆண்டுகளில், 50 ஆண்டுகளில் மலையகம் எவ்வாறு இருக்கவேண்டும் என்ற இலக்கு என்னிடம் உள்ளது. அதனை நோக்கியே நாம் பயணிக்கவேண்டும். அதற்கு உங்களின் ஒத்துழைப்பும் அவசியம்" - என்றார்.



### வெளியாரின் பாடம் எங்களுக்குத் தேவையில்லை

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வேட்பாளர்களுக்கு வெளியிலிருந்து எவரும் பாடம் கற்றுக்கொடுக்கத் தேவையில்லை. எமது தலைவர் ஆறுமுகன் தொண்டமானால் அனைத்து பயிற்சிகளும் எமக்கு வழங்கப்பட்டுள்ளன - என்று இ.தொ.காவின் நிதி செயலாளரும், நுவரெலியா மாவட்ட வேட்பாளருமான மருதபாண்டி ராமேஷ்வரன் இங்கு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"நுவரெலியா மாவட்டத்தின் தலைமை வேட்பாளராக தலைவர் ஆறுமுகன் தொண்டமானே நியமிக்கப்பட்டிருந்தார். அவரின் மறைவின் பின்னர், அப்பதவி வேறு யாரிடமோ சென்றுவிடும் என சிலர் கூறினர்.

அவ்வாறு செல்லவில்லை. தலைமை வேட்பாளர் பதவி ஜீவன் தொண்டமானுக்கே வழங்கப்பட்டது. அவருக்கு அனுபவம் இல்லையென்றால் அப்பதவியை மொட்டு கட்சிக்காரர்கள் வழங்கியிருப்பார்களா?

கடந்த நான்கு வருடங்களாக செல்லும் இடங்களுக்கெல்லாம் ஜீவனை, தலைவர் அழைத்துச் சென்றார். பயிற்சிகளை வழங்கினார். எனவே, இ.தொ.கா. என்ற பலம்வாய்ந்த அமைப்புக்கு எவரும் பாடம் கற்றுக்கொடுக்க வேண்டியதில்லை. சமூகத்தை வழிநடத்தும் சக்தியும், அனுபவமும் எமக்கிருக்கின்றது.

காங்கிரஸ் உறுப்பினர்கள் தேர்தல் காலத்தில் மட்டும் வருபவர்கள் அல்லர். மக்களோடு மக்களாக வாழ்பவர்கள். எனவே, பொதுத் தேர்தலில் எமது ஐந்து வேட்பாளர்களையும் வெற்றிபெற வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். இன்று மலையக சமூகம் ஓரணியில் திரண்டுள்ளது. நிச்சயம் இ.தொ.காவை பலப்படுத்துவோம் என உறுதியளித்துள்ளனர்" - என்றார்.



ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று கண்டி மல்வத்தை பௌத்த பீடத்தின் மகாநாயக்க தேரர் வண. திப்பட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரரை சந்தித்து ஆசி பெற்றார்.

# வெயாங்கொடை வீதி விபத்தில் பெண் உட்பட இருவர் பலி!




வெயாங்கொடை பிரதேசத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற வீதி விபத்தில் தாய் உட்பட ஆண்பிள்ளைகள் இருவர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று மாலை 3.15 மணியளவில் வெயாங்கொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மல்லேஹெவ வெயங்கொட வீதியில் குடல்ஒலுவ பிரதேசத்தில் முச்சக்கரவண்டி கட்டுப்பாட்டை இழந்ததால், வீதியைவிட்டு விலகி வயலில் வீழ்ந்ததால் இந்த விபத்து நேர்ந்ததாக வெயாங்கொட பொலிசார் தெரிவித்துள்ளனர்.

விபத்தில் படுகாயமடைந்த முச்சக்கரவண்டியை செலுத்திய பெண் மற்றும் முச்சக்கரவண்டியில் பிரயாணம் செய்த பெண், ஆண்பிள்ளைகள் இருவர் மற்றும் ஆண் ஒருவரும் வத்துபிடிவல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். பின்னர், சிகிச்சை பலனின்றி முச்சக்கரவண்டியை செலுத்திய பெண் மற்றும் ஆண்பிள்ளைகள் இருவரும் உயிரிழந்துள்ளனர்.

40 வயதுடைய பெண், 9 மற்றும் ஒன்றரை வயதுடைய ஆண் பிள்ளைகள் இருவரே இவ்வாறு உயிரிழந்தனர். இந்த விபத்தில் காயமடைந்த பெண் ஒருவர் சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.



முன்னாள் மேல்மாகாண முதலமைச்சர் இசுறு தேவப்பிரிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து விலகி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இணைந்துகொண்டார். நேற்று பிலியந்தலையில் நடந்த கூட்டத்தில் பிரதமர் மஹிந்தவிடம் அதற்கான அங்கத்துவத்தைப் பெற்றார்.

(படப்பிடிப்பு:- சமன் அபேசிறிவர்தன)

# கொட்டகலையில் இராணுவ முகாம்; மக்களுக்கு இடையூறென ராதா கண்டனம்!

நாட்டை இராணுவமயப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துவரும் இந்த அரசாங்கம், கொட்டகலையிலும் இராணுவ முகாமொன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. இது மக்களுக்கு பெரும் இடையூறாக அமையும் - என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட வேட்பாளருமான இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

கொட்டகலையில் நேற்று நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"ஜனாதிபதித் தேர்தலின்போது நாம் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளித்தோம். எமது மலையக மக்களும் அவருக்கே வாக்களித்தனர். ஆனால், துரதிர்ஷ்டவசமாக அவரால் வெற்றி பெறமுடியாமல் போனது. பாதுகாப்பை முன்னிலைப்படுத்தி பிரசாரம் செய்தே மொட்டு தரப்பு வெற்றிபெற்றது.

பாதுகாப்புப் பற்றி கதைத்தவர்கள் இன்று கொட்டகலையிலும் இராணுவ முகாமொன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர். இவ்வாறு இராணுவ முகாம் அமையுமானால் அது மக்களுக்கு இடைஞ்சலாகவே அமையும். இரவில் நடமாடினால் உள்ளே போட்டுவிடுவார்கள். பொலிஸாரிடமாவது உண்மையை எடுத்துக் கூறிவிட்டு வந்துவிடலாம். ஆனால், இராணுவம் வந்தால் அவ்வாறு செய்யமுடியாது. சிவில் நிர்வாகத்துக்கும், இராணுவ நிர்வாகத்துக்குமிடையிலான வேறுபாடு இதுதான்.



அத்துடன், அமைச்சுகளுக்கான செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் என எல்லா பதவிகளுக்கும் இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டு வருகின்றனர். இவ்வாறு படிப்படியாக நாடு இராணுவ ஆட்சியை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றது.

போதாக்குறைக்கு மலையகத்துக்கும் முகாம் வரப்போகின்றது. இதனைத் தடுத்துநிறுத்த வேண்டுமானால் எமது ஆட்சி உருவாகவேண்டும். எனவே, சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்திக்கு வாக்களிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். மேலும், 13ஆவது திருத்தச்சட்டம், 19ஆவது திருத்தச்சட்டம் ஆகியனவும் நீக்கப்படும் என்கின்றனர். இதனை தடுப்பதற்கு மொட்டு கட்சிக்கு வாக்களிக்கக் கூடாது" - என்றார்.

## இன்றைய ராசி பலன்கள்

**13.07.2020**

| | |
|---|---|
| மேஷம் - | கவனம் |
| ரிஷபம் - | வரவு |
| மிதுனம் - | தாமதம் |
| கடகம் - | செலவு |
| சிம்மம் - | ஆதரவு |
| கன்னி - | அசதி |
| துலாம் - | வெற்றி |
| விருச்சிகம் - | வருத்தம் |
| தனுசு - | நன்மை |
| மகரம் - | அமைதி |
| கும்பம் - | நற்சொல் |
| மீனம் - | பயம் |

**சுப நேரம்**
காலை: 06.15 - 07.15
மாலை: 04.45 - 05.45

**இராகு காலம்**
07.30
09.00

**எம கண்டம்**
10.30
12.00

# தெற்காசியாவின் முதலாவது 5G Mixed Reality நேரடி தொலைக்காட்சி நிகழ்ச்சியை காட்டும் மொபிடெல்






இலங்கையின் தேசிய மொபைல் சேவை வழங்குனரான மொபிடெல், **5G** தொழில்நுட்பத்தின் உருமாற்றம் பெறும் திறனைக் காண்பிக்கும் வகையில் தெற்காசியாவின் முதலாவது **Mixed Reality** நேரடி தொலைக்காட்சி நிகழ்ச்சியை **5G** வலையமைப்பின் மூலம் **SLT Peo TV** – சரண தொலைக்காட்சி அலைவரிசையுடன் இணைந்து வழங்கியது.

**5G** தொழில்நுட்பத்துடன் நேரடி தொலைக்காட்சி ஒளிபரப்பின் புதிய சகாப்தத்தை முன்னெடுக்கும் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தருணம், இலங்கை தொலைத் தொடர்பு ஒழுங்குமுறை ஆணையத்தின் **(TRCSL)** பணிப்பாளர் நாயகமான ஓஷத சேனாநாயக்க மற்றும் **SLT** மற்றும் **Mobitel** இன் தலைவர் திரு. ரொஹான் பெர்னாண்டோ ஆகியோரால் கலந்து சிறப்பிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சி காட்சிப்படுத்தப்படும்போது இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்கு முறை ஆணையத்தின் **(TRCSL)** பணிப்பாளர் நாயகமான திரு. ஓஷத சேனாநாயக அந்நேரடி நிகழ்வில் கலந்துகொண்டார்.

**TRCSL** இல் தமது அலுவலக வளாகத்திலிருந்து மொபிடெலின் **5G** வலையமைப்பின் மூலம் "அசீம" நேர்காணல் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் கலந்துகொண்டார்.

**5G** தொழில்நுட்பத்தின் மூலம் குறைந்தளவு தாமதத்துடன் அதிவேகமான திறன்கள் புவியியல் ரீதியாக பரவியிருக்கும் பங்கேற்பாளர்களை உண்மையான நேரத்தில் மெய்நிகர் நிகழ்வுகளில்– **virtual events** இணைக்க அனுமதிப்பதன் மூலம் எல்லைகளை எவ்வாறு தடையற்றவையாக மாற்றிட முடியும் என்பதை **Mixed Reality** தொழில்நுட்பத்துடனான இவ்வொளிபரப்பு வெளிப்படுத்தியது.

மேலும், இலங்கையில் டிஜிட்டல் உருமாற்றத்தின் தலைவன் என்றவகையில் **5G** தொழில்நுட்பத்திற்கான நாட்டின் தேவை மற்றும் அதனுடன் தொடர்புடைய சேவைகளை கோடிட்டுக் காட்டிடும் விதத்தில் மொபிடெல் அண்மையில் தமது நவீன **5G** வலையமைப்பை **One Galle Face Mall** இல் அறிமுகப்படுத்தியது.

# புதிய பரிமாணமத்துடன் சேவை வழங்கவுள்ள இலங்கை வங்கியின் மந்திகைக் கிளை

வடமாகாணத்தில் 2012ம் ஆண்டு யூலை 02 அன்று பருத்தித்துறை கிளையின் ஓர் விரிவாக்கற்கிளையாக ஆரம்பிக்கப்பட்ட இலங்கை வங்கி மந்திகைக்கிளையானது தனது எட்டு வருடப்பூர்த்தியின் பின்னர் விசாலமான இடவசதி, கண்கவர் தோற்றம் மற்றும் புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய வாடிக்கையாளர் சேவையை எதிர்வரும் யூலை மாதம் 15ஆம் திகதி முதல் புதிய இடத்தில் வழங்கக் காத்திருக்கின்றது.

இதுவரை காலமாக மந்திகை மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களுக்கான வங்கியியல் ரீதியான தேவைகளை மந்திகைச்சந்தி, மந்திகை என்ற முகவரியில் நிறைவேற்றி வந்த இலங்கை வங்கி மந்திகைக்கிளையானது தற்போது தமது வாடிக்கையாளர்களுக்கான வசதிகளையும், சேவைகளையும் மேம்படுத்தும் நோக்கோடு அதிநவீன தொழில்நுட்பங்களைப் பெற்றுக்கொடுத்தல் என்ற எண்ணக்கருவின் கீழ் யூலை மாதம் 15ம் திகதி 2020 முதல் சாவகச்சேரி வீதி, மந்திகை சந்தை அருகாமை என்ற புதிய முகவரியில் தனது சேவைகளை வழங்கவிருக்கின்றது.

புதியதொரு அமைவிடத்திற்கு இடம்மாற்றப்பட்ட இலங்கை வங்கிக் கிளையை உத்தியோக பூர்வமாகத்திறந்து வைக்கும் நிகழ்வானது எதிர்வரும்

இலங்கைவங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

யூலை 15ஆம் திகதி 2020 காலை 9 மணியளவில் இலங்கை வங்கியின் வடமாகாணத்துக்கான உதவிப்பொது முகாமையாளர் சுமங்கலா பிரபாகரன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வுக்கான பிரதம விருந்தினராக இலங்கைவங்கியின் விற்பனைகள் மற்றும் நெறிப்படுத்தல் மேலாண்மைக்கான பிரதிப்பொது முகாமையாளர் ஊ. அமரசிங்க கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

யாழ் மாவட்டத்தில் மந்திகைப்பிர தேசத்திலும் அதனை அண்டிய பிரதேசங்களிலும் வாழ்ந்துவரும் சுயதொழில் முயற்சியாளர்கள், விவசாயிகள், அரச ஊழியர்கள், சிறிய மற்றும் நடுத்தர வியாபாரிகள் போன்ற வேறுபட்ட வருமான நிலைகளையுடைய மக்களுக்கான வங்கியியல் பண மீள்சுழற்சி இயந்திரத்திரத்துடன் வாகனத்தரிப்பிட வசதியியுடனும் கூடிய சேவைகளை வழங்கவிருக்கின்றது.

# உலகின் முன்னணி ஆயிரம் வங்கிகள் வரிசையில் பத்தாவது வருடமாகவும் கொமர்ஷல் வங்கி

COMMERCIAL BANK

The Banker TOP 1000 WORLD BANKS 2020

2020ஆம் ஆண்டுக்கான உலகின் முன்னணி ஆயிரம் வங்கிகளின் தரப்படுத்தல் வரிசையில் 51 இடங்கள் மேல்நோக்கி முன்னேறி இலங்கையின் வங்கித்துறைக்கு பெரும் கௌரவத்தை ஈட்டிக் கொடுத்துள்ளது கொமர்ஷல் வங்கி. அத்தோடு இந்த வரிசையில் தொடர்ந்து பத்து வருடங்களாக இடம்பிடித்து வரும் இலங்கையின் ஒரே வங்கி என்ற பெருமையையும் அது தனதாக்கி உள்ளது.

ஐக்கிய இராச்சியத்தின் பினான்ஸியல் ரைம்ஸ் குழுமத்தால் வெளியிடப்படும் கீர்த்திமிக்க 'த பேங்கர்' சஞ்சிகை 50ஆவது தடவையாக உலகின் முன்னணி ஆயிரம் வங்கிகள் வரிசைகளின் பட்டியலை வெளியிட்டுள்ளது. அதில் கொமர்ஷல் வங்கி 878ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. வங்கியின் வரிசை ஒன்று மூலதனத்துக்கு இசைவாக இது அமைந்துள்ளது.

# மூன்று ஹெட்போன் மொடல்களை அறிமுகப்படுத்தும் OPPO




OPPO இலங்கையில் மூன்று புதிய ஹெட்போன் மொடல்களை அறிமுகப்படுத்தியுள்ளது. OPPO Enco Free> OPPO Enco W31 மற்றும் OPPO Enco M31 ஆகிய. இந்த 3 "புதுமையான, உயர்தர தயாரிப்புகள், இலங்கை நுகர்வோருக்கு சிறந்த பயனர் அனுபவங்களை கொண்டு வருவதற்கான" OPPO இன் பணியின் ஒரு பகுதியாகும்.

OPPO Enco Free: "உங்கள் ஸ்மார்ட்போனுக்கு சரியான ஜோடி"

OPPO Enco Free ஹெட்போன்களானது, OPPO ஒரு ஸ்மார்ட்போன் நிறுவனம் என்பதையும் தாண்டி, 2019 ஆம் ஆண்டில் Iot வணிகத்தில் நுழைந்ததிலிருந்து அது வழங்கும் முதலாவது கம்பியற்ற ஓடியோ தயாரிப்பாகும். இது அதன் தரக்குறியீட்டிலுள்ள ஹெட்போன்களில் ஸ்மார்ட்போன்களுடன் மிக ஒத்திசையும் ஒன்றாக அமைந்துள்ளது.

ஹெட்போன்கள், இரு பக்க குறைந்த தாமத ப்ளூடூத் சமிக்ஞை வெளியீட்டை (binaural low-latency Bluetooth transmission) பயன்படுத்துவதோடு, இங்கு 120 மில்லி செக்கன் (120ms) எனும், தொழில்துறையிலேயெ மிகக் குறைவான அளவீட்டை (Reno 3 Pro 5G இனை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட ஆய்வகத் தரவு) கொண்டுள்ளது. குறைந்த சமிக்ஞை வெளியீட்டுத் தாமதமானது, அதிக ஓடியோ–வீடியோ ஒத்திசைவு மற்றும் குறைந்த இணைப்பு குறுக்கீட்டுக்கு ஏற்றவாறு அமைக்கிறது.

இந்த ஹெட்போன்கள், சந்தையிலுள்ள எந்தவொரு ஸ்மார்ட்போனுடனும் இணைந்து செயற்படக்கூடியனவாக உள்ளன.

ஓடியோ தரத்தைப் பொறுத்தவரை, OPPO Enco Free ஆனது, தொழில்துறையில் அல்ட்ரா–டைனமிக் ஸ்பீக்கர்களுடன் பதிக்கப்பட்ட முதலாவது நிகர் உண்மையான வயர்லெஸ் ஹெட்போன்களாகும். 13.4 மிமீ டைனமிக் ஸ்பீக்கர்களானது, இரட்டை காந்த சுற்றுகள் மற்றும் ஒரு FPC நெம்புகோலைப் பயன்படுத்துகின்றன. இவை பொதுவாக உயர்நிலை முழு அளவிலான ஸ்பீக்கர்களுக்காக ஒதுக்கப்படும் தொழில்நுட்பங்களாகும்.

கனமான ட்ரம் பீட்ஸ் (drumbeats) மற்றும் அதி திறனான தாழ்வு நிலை ஒலிகளை துல்லியமாக மீளமைப்பு செய்து வழங்கப்படுவதை உறுதிசெய்கின்றன. இந்த ஹெட்போன்களில் மற்றொரு தொழிற்துறை முதன்முதல் சிறப்பம்சமான,

அவற்றின் மக்னலியம் – தைத்தேனியம் (magnalium-titanium) கலப்பு பிரிதகடுகளை கூறலாம்.

இந்த அம்சங்களனைத்தும் பிரித்தறியக்கூடியதும் சக்திவாய்ந்ததுமான ஓடியோ அனுபவத்தை வழங்குகின்றன.


# ஆண்டின் சிறந்த 20 கூட்டு நிறுவனங்களில் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டுள்ள JAT



கடந்த 25 ஆண்டுகளாக இலங்கையில் மர பூச்சுகள் உற்பத்திகளைப் பொறுத்தவரையில் முன்னிலை வகித்து வருகின்ற JAT Holdings, LMD இன் Brands Annual 2020 தரப்படுத்தலில் மிகச் சிறந்த 20 நிறுவனங்களில் ஒன்று என்ற அங்கீகாரத்தை அண்மையில் சம்பாதித்துள்ளது. Brands Finance Lanka நடத்திய ஒரு ஆய்வின் அடிப்படையில், இலங்கையின் சிறந்த செயல்திறன் கொண்ட 20 முன்னணி கூட்டு நிறுவனங்களில் ஒன்றாக புதிதாக சேர்ந்து கொண்டுள்ள வர்த்தகநாமங்களில் JAT உம் அடங்கியுள்ளது.

கடந்த பல ஆண்டுகளாக, நாட்டின் வலுவான கூட்டு நிறுவன வர்த்தகநாமங்களில் ஒன்றாக JAT தனது சந்தை இருப்பை வலுவாக ஸ்தாபித்துக்கொண்டுள்ளது. அதேபோல் Sayerlack இற்கான உலகின் மிகப்பெரிய விநியோகஸ்தராகவும் திகழ்ந்து வருகிறது.

# DFCC வங்கி டிஜிட்டல் பரிணாமத்தில் கூட்டு சேர்ந்துள்ளது FineTech




இலங்கையில் வேகமாக வளர்ச்சி கண்டு வருகின்ற வணிக வங்கிகளில் ஒன்றான DFCC வங்கி, டிஜிட்டல் பரிணாம வளர்ச்சியைத் தொடர்ந்தும் முன்னெடுத்து வருவதுடன், இலங்கையில் வங்கித்துறையில் முதன்முதலாக Google G-suit Enterprises தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதற்காக FineTech Sri Lanka உடன் கூட்டுச் சேர்ந்துள்ளது. 2025 ஆம் ஆண்டளவில் மிகவும் கூடுதலான அளவில் வாடிக்கையாளர்களை மையமாகக்கொண்ட, டிஜிட்டல் ரீதியாக இயங்கும் வங்கியாக மாறுவதற்கான அதன் பயணத்தில் ஒரு மாபெரும் முன்னேற்றமாகும். இது 2016 ஆம் ஆண்டில் வணிக பயன்பாடுகளுக்கான (Business productivity suite) Google Apps உடன் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தத்தின் தொடர்ச்சியாக அமைந்துள்ளதுடன், இது கடந்த ஆண்டுகளில் வங்கிக்கு பலவற்றைத் தொடங்குவதற்கான வழிகளை ஏற்படுத்தி, வாடிக்கையாளர் திருப்தியை உறுதிப்படுத்தும் வகையில் பல்வேறு உற்பத்திகள் மற்றும் சேவைகளை ஆரம்பிக்க வழிகோலியிருந்தமை குறிப்பிடத்தக்கது. கொவிட்–19 தொற்றுநோய் இலங்கையின் பெரும்பாலான வணிகங்களை தீவிரமாக பாதித்துள்ளதுடன், இதுபோன்ற சூழ்நிலைகளுக்கு முகங்கொடுக்க இன்னும் போதுமான அளவில் தயார்படுத்தல் இன்மையால் முழு அளவிலான சேதம் ஏற்பட்டுள்ளது. எவ்வாறாயினும், 2016 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட முற்கூட்டிய தீர்மானங்களும், செயல்முறைகளில் முன்னெடுக்கப்பட்ட விரைவான மாற்றங்களும் இந்த நெருக்கடி நேரத்தில் DFCC வங்கிக்கு நன்மை பயக்கும் என்பதை நிரூபித்துள்ளதுடன், அன்றாட நடவடிக்கைகளுக்கு குறைந்தபட்ச இடையூறுகளுடன், வங்கிக்கு எந்த பாதகமும் இல்லாமல், எங்கள் ஊழியர்களை வீட்டிலிருந்து பணிகளை முன்னெடுக்கும் வகையில் சீராக மாற்றுவது மற்றும் ஈடுஇணையற்ற வாடிக்கையாளர் சேவையை தொடர்ந்தும் முன்னெடுக்க வழிகோலியுள்ளன.

# Marina Square கட்டுமானப் பணிகள் ஆரம்பம்



Marina Square இன் கட்டுமானப் பணிகள் மே மாதம் 11ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன. நிறுவனத்தின் பொது முகாமையாளர் புத்திக குணரத்ன இது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில், 'கட்டுமானப் பணிகள் ஒரு சிறிய குழுவுடன் ஆரம்பிக்கப்பட்டு, படிப்படியாக அதிகரிக்கப்பட்டு, தேவையான அதிகாரசபைகளின் அனுமதிகளுக்கமைய முழுமையான செயற்பாடுகளை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது என்றார்'. அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில், 'கட்டுமான நடவடிக்கைகள் அனைத்தும் முழுமையான சட்ட நடவடிக்கைகளுக்கு அமைய தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், சுகாதார மற்றும் ஏனைய அதிகாரசபைகளின் நியமங்களுக்கு அமைய முழுமையான அனுமதிகளைப் பெற்று முன்னெடுக்கப்படுவதாகவும்' தெரிவித்தார். மேலும், Marina Square Development கட்டுமானப் பணிகளை ஆரம்பிப்பதற்கான அனுமதிகளும் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

உலகம் முழுவதுமுள்ள பங்காளிகள் மற்றும் பொருள் வழங்குநர்களுடன் இணைந்து செயற்பட்டு, முழுமையான பாதுகாப்பையும் செயற்திறனையும் முடிந்தளவு உறுதிப்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது.

Marina Square வேலைத்திட்டத்தின் பிரதான ஒப்பந்ததார கட்டுமான நிறுவனப் பிரதிநிதி ஸோ யாங் இதுபற்றிக் கூறுகையில், 'China Harbour Engineering Company (CHEC) உலகளாவிய ரீதியில் கட்டுமானத்துறையில் ஒரு முன்னணி நிறுவனமாகும்.

அது, அறிவு, அனுபவம் மற்றும் திறமை உட்பட தேவையான அனைத்து வசதிகளையும் கொண்டு செயற்படக்கூடியது. அதிகாரசபைகளின் அனுமதிகளுக்கு அமைய, தமது செயற்பாடுகளைப் படிப்படியாக அதிகரிக்கும் வசதிகளையும் கொண்ட ஒரு நிறுவனமாகும்.

# கொரோனாவின் கோரத்தாண்டவம்:

## அனைத்து சர்வதேச விளையாட்டுப் போட்டிகளையும் இரத்துச்செய்தது சீனா




சீனாவில் இவ்வருடம் நடைபெறவிருந்த அனைத்து சர்வதேச விளையாட்டுப் போட்டிகளும் இரத்துச்செய்யப்படுவதாக சீன அரசு அறிவித்துள்ளது.

உலகை காவுகொண்டுள்ள கொரோனா வைரஸ் தொற்று முதன்முதலாக சீனாவில் கண்டறியப்பட்டது. சீனாவில் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்குச்சட்டம் மற்றும் மேலதிக வைத்திய சேவையின் மூலம் சீனா கொரோனா வைரஸை கட்டுப்படுத்தியது.

ஆனால், தற்போது கூட பீஜிங் போன்ற முக்கியமான நகரங்களில் கொரோனா வைரஸ் தொற்று அதிகரித்துவருகின்றது. இதன் காரணமாக இந்த வருடம் நடைபெறவுள்ள சர்வதேச விளையாட்டுப் போட்டிகள் அனைத்தையும் இரத்து செய்வதாக சீனா அறிவித்துள்ளது.

அதனடிப்படையில் ஆடவருக்கான நான்கு டென்னிஸ் தொடர்கள், பெண்கள் டென்னிஸ் சங்கத்தின் ஆறு தொடர்கள், ஒக்டோபர் மாதம் ஆசிய விளையாட்டு கிளிம்பிங் சம்பியன்ஷிப், ஒக்டோபர் மாதம் நடைபெறவிருந்த இரண்டு சைக்கிளோட்டப் போட்டிகள் மற்றும் டிசம்பர் மாதம் நடைபெறவிருந்த பூப்பந்தாட்ட தொடர் ஆகியன இவ்வாறு இரத்துச்செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில், 2022 குளிர்கால ஒலிம்பிக் போட்டிக்கான சோதனை மட்டும் நடைபெறும் என சீனா அறிவித்துள்ளது.

## டெஸ்ட் அரங்கில் புதிய சாதனை பட்டியலில் இடம்பிடித்த பென் ஸ்டோக்ஸ்



டெஸ்ட் கிரிக்கெட் போட்டி வரலாற்றில் 4,000 ஓட்டங்களையும்,150 விக்கெட்டுகளையும் வீழ்த்திய வீரர்களின் பட்டியலில் இங்கிலாந்து அணியின் சகலதுறை வீரர் பென் ஸ்டோக்ஸ் இடம்பிடித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தாக்கத்துக்குப் பின்னர் நடைபெறும் முதல் சர்வதேச கிரிக்கெட் போட்டியாக இங்கிலாந்து மற்றும் மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடர் தற்சமயம் சவுத்தம்டணில் நடைபெற்று வருகிறது.

இங்கிலாந்து அணியின் வழமையான அணித்தலைவர் ஜோ ரூட் முதல் டெஸ்ட் போட்டியில் பங்கேற்காததன் காரணமாக இப்போட்டியில் சகலதுறை வீரர் பென் ஸ்டோக்ஸ் அணித்தலைவராக செயற்பட்டுவருகிறார். முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி சார்பில் பென் ஸ்டோக்ஸ் அதிகப்படியாக 43 ஓட்டங்களை பெற்றுக்கொண்டார்.

அதேபோன்று பந்துவீச்சிலும் சிறப்பாக செயற்பட்ட பென் ஸ்டோக்ஸ், இங்கிலாந்து அணியில் அதிகப்படியாக 4 விக்கெட்டுகளை கைப்பற்றினார். இதன்மூலம் டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் 4,000 ஓட்டங்களையும் 150 விக்கெட்டுகளையும் வீழ்த்திய வீரர்களின் பட்டியலில் பென் ஸ்டோக்ஸ் இடம்பிடித்தார்.

குறித்த பட்டியலில் கேரி சோபர்ஸ் (8,032 ஓட்டங்கள், 235 விக்கெட்டுகள்), இயன் போத்தம் (5,200 ஓட்டங்கள், 383 விக்கெட்டுகள்), கபில் தேவ் (5,248 ஓட்டங்கள், 434 விக்கெட்டுகள்), ஜெக் காலிஸ் (13,289 ஓட்டங்கள், 292 விக்கெட்டுகள்), டேனியல் வெட்டோரி (4,531 ஓட்டங்கள், 362 விக்கெட்டுகள்), பென் ஸ்டோக்ஸ் (4,099 ஓட்டங்கள், 151 விக்கெட்டுகள்) ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

## மீண்டும் களமிறங்குவேன் !
### அதிவேக மனிதன் உசைன் போல்ட்




உலகின் அதிவேக மனிதராகத் திகழும் ஜமைக்காவைச் சேர்ந்த உசைன் போல்ட், எனது பயிற்சியாளர் அழைத்தால் மீண்டும் களமிறங்குவேன் என அறிவித்துள்ளார்.

உலகின் மின்னல் ஓட்ட வீரராக வலம்வந்த ஜமைக்காவின் உசைன் போல்ட் 100 மீற்றர் மற்றும் 200 மீற்றர் ஓட்டங்களில் ஒலிம்பிக் போட்டியில் 8 தங்கப்பதக்கமும், உலக தடகள சம்பியன்ஷிப்பில் 11 தங்கப்பதக்கமும் வென்று சாதனை படைத்துள்ளார். அத்துடன், 100 மீற்றர் மற்றும் 200 மீற்றர் ஓட்டத்தில் அதிவேகமாக ஓடிய உலக சாதனையும் உசைன் போல்ட் வசமே உள்ளது. கடந்த 2017ஆம் ஆண்டு உசைன் போல்ட் ஓய்வுபெற்றார்.

இந்நிலையிலேயே உசைன் போல்ட் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டார், எனது பயிற்சியாளர் கிளைன் மில்ஸ் மீண்டும் என்னிடம் வந்து, இதைச் செய்யலாம் (மறுபிரவேசம்) என்று சொன்னால், அதற்குத் தயார். ஏனெனில், அவர் மீது நான் மிகுந்த நம்பிக்கை வைத்திருக்கிறேன். நாம் இதை செய்யப்போகிறோம் என்று அவர் கூறினால், அது சாத்தியமே என்பதை அறிவேன். எனவே, அவர் அழைத்தால் மறுபடியும் களம் இறங்கத் தயார் - என்றார்.




## இங்கிலாந்தின் பீபா உலகக் கிண்ண நாயகன் ஜெக் சார்ல்டன் காலமானார்



1966ஆம் ஆண்டு இங்கிலாந்து அணி காற்பந்து விளையாட்டியில் உலக சம்பியனான வேளையில் இங்கிலாந்து அணியில் விளையாடிய ஜெக் சார்ல்டன் கடந்த வெள்ளிக்கிழமை தனது 85ஆவது வயதில் காலமானார். அண்மைக்காலமாக உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்ட நிலையில் வாழ்ந்துவந்த ஜெக் சார்ல்டன் கடந்த வெள்ளிக்கிழமை இரவு காலமானார்.

1966ஆம் ஆண்டு பீபா உலகக் கிண்ணத் தொடரில் இங்கிலாந்து அணியின் அனைத்துப் போட்டிகளிலும் ஜெக் சார்ல்டன் விளையாடினார். இறுதிப்போட்டியில் 4-2 என்ற கோல்கள் கணக்கில் மேற்கு ஜெர்மனியை இங்கிலாந்து அணி வீழ்த்தி சம்பியனானது.

இங்கிலாந்து அணிக்காக 35 போட்டிகளில் விளையாடிய ஜெக் சார்ல்டன் 6 கோல்களை அடித்துள்ளார். ஆனால், இங்கிலாந்தின் லீட்ஸ் யுனைடெட் அணிக்காக 23 வருடங்கள் விளையாடி 773 ஆட்டங்களில் ஜெக் சார்ல்டன் பங்கேற்றுள்ளார். இவர் 1973ஆம் ஆண்டு காற்பந்தாட்ட போட்டிகளிலிருந்து ஓய்வுபெற்றார்.

ஜெக் சார்ல்டனின் மறைவுக்கு இரசிகர்களும் கால்பந்து வீரர்களும் இரங்கல் தெரிவித்தனர்.

## கொரோனா வைரஸ் தாக்கத்தின் பின்னர் நடைபெறவுள்ள முதல் இருபதுக்கு இருபது லீக் தொடர்
### வீரர்களுக்கு 14 நாட்கள் தனிமைப்படுத்தல்




மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் சபையின் ஏற்பாட்டில் வருடா வருடம் நடைபெற்றுவரும் கரீபியன் பிரீமியர் லீக் தொடரின் இந்த ஆண்டுக்கான தொடர் அடுத்த மாதம் ஓகஸ்ட் 18 ஆம் திகதி ஆரம்பமாகுவதாக மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் சபை மற்றும் ட்ரினிடாட் மற்றும் டொபாக்கோ அரசாங்கம் இடையே நடைபெற்ற கூட்டத்தில் 2020ஆம் ஆண்டுக்கான கரீபியன் பிரீமியர் லீக் தொடர் ஆகஸ்ட் 18ஆம் திகதி ஆரம்பமாகி செப்டம்பர் மாதம் 10ஆம் திகதி நிறைவுபெறும் என முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக கொரோனா வைரஸ் தாக்கத்திற்கு பின்னர் நடைபெறவுள்ள முதல் இருபதுக்கு இருபது லீக் தொடராக கரீபியன் பிரீமியர் லீக் தொடர் மாறியிருக்கிறது. கரிபியன் ப்ரீமியர் லீக் தொடரில் பங்கெடுக்கின்ற வீரர்கள், போட்டி உத்தியோகத்தர்கள் அனைவரும் ட்ரினிடாட் மற்றும் டொபாக்கோ தீவுக்கு தொடர் நடைபெறும் முன்னரே வரவழைக்கப்பட்டு 14 நாட்கள் கொண்ட சுய தனிமைப்படுத்தல் செயற்பாட்டுக்கு உட்படுத்தப்படுவர் என மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

மேலும், வெளிநாடுகளிலிருந்து வரும் வீரர்களை ஒருங்கிணைத்து அனைத்து அணிகளும் ஒரே விடுதியில் தங்கவைக்கப்படுவர் எனவும் அனைத்து வீரர்களுக்கும் பின்னர் கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், குறித்த தொடர் கொரோனா வைரஸ் தாக்கத்துக்குப் பின்னர் நடைபெறவுள்ள முதல் பிரபல்யமான இருபதுக்கு இருபது லீக் தொடர் என்ற காரணத்தினால் இரசிகர்களிடத்தில் பாரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. ஆனால், கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக மூடிய மைதானத்தில் குறித்த தொடர் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அவுஸ்திரேலிய பனிச்சறுக்கல் வீரர் அலெக்ஸ் புல்லின் கடலில் மூழ்கி உயிரிழப்பு

பனிச்சறுக்கல் விளையாட்டில் இரண்டு தடவைகள் உலக சம்பியன் பட்டம் வென்ற அவுஸ்திரேலிய பனிச்சறுக்கல் வீரர் அலெக்ஸ் புல்லின் கடலில் மூழ்கி உயிரிழந்தார். அவுஸ்திரேலியாவின் குயின்ஸ்லேண்ட் மாகாணத்தில் பாம்கடல் பகுதியில் 32 வயதுடைய அலெக்ஸ் புல்லின் மீன்பிடித்துக்கொண்டிருந்தபோது எதிர்பாராதவிதமாக கடலில் மூழ்கி உயிரிழந்தார்.

இதனைக்கண்ட ஆழ்கடல் நீச்சல் வீரரொருவர் மீட்புப் படையினருக்குத் தகவல் தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து 45 நிமிட போராட்டத்திற்கு பிறகு அலெக்ஸ் புல்லின் உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டார்.

உயிரிழந்த அலெக்ஸ் புல்லின் பனிச்சறுக்கல் விளையாட்டில் இரண்டு தடவைகள் உலக சம்பியன் பட்டம் வென்றுள்ளார். அவரது மறைவு அதிர்ச்சியளிப்பதாக அவுஸ்திரேலிய விளையாட்டு அமைப்பு இரங்கல் தெரிவித்தது.



## லா-லிகா: தொடர் வெற்றிகளுடன் சம்பியன் பட்டத்தை நெருங்கும் ரியல் மெட்ரிட்



லா-லிகா காற்பந்து தொடர் இறுதிக் கட்டத்தை எட்டிய நிலையில், லீக் ஆட்டமொன்றில் முன்னாள் சம்பியன் ரியல் மெட்ரிட் - அலாவ்ஸ் கழகத்தை எதிர்கொண்டது.

விறுவிறுப்பாக நடைபெற்ற குறித்த போட்டியின் ஆரம்பத்திலிருந்து ரியல் மெட்ரிட் அதிக ஆதிக்கம் செலுத்தியது. போட்டியின் 11ஆவது நிமிடத்தில் ரியல் மட்ரிட் கழகத்துக்கு பெனால்டி வாய்ப்பு கிடைத்தது. குறித்த வாய்ப்பை சிறப்பாக பயன்படுத்திய நட்சத்திர வீரர் கரிம் பென்ஜிமா கோல் அடித்தார்.

இந்நிலையில், போட்டி முதல் பாதி முடிவில் ரியல் மட்ரிட் கழகம் 1-0 என முன்னிலை பெற்றது.

தொடர்ந்து இரண்டாம் பாதி ஆட்டத்தில் போட்டியின் 51ஆவது நிமிடத்தில் ரியல் மெட்ரிட் வீரர் மார்கோ அசென்சியோ கோல் அடித்தார். இதன்மூலம் போட்டி முடிவில் ரியல் மெட்ரிட் 2-0 என்ற கோல்கள் கணக்கில் அலாவ்ஸ் அணியை வீழ்த்தியது. மேலும் கொரோனா இடைவெளியின் பின்னர் ரியல் மெட்ரிட் தொடர்ச்சியாக சுவைத்த 8ஆவது வெற்றி இதுவாகும்.

இந்த வெற்றியின் மூலம் ரியல் மெட்ரிட் சம்பியன் பட்டத்தை நெருங்கியுள்ளது. அந்த அணி 35 போட்டிகளில் விளையாடி 80 புள்ளிகள் பெற்று முதலிடத்தில் நீடிக்கிறது. நடப்பு சம்பியன் பார்சிலோனா அணி 35 போட்டிகளில் விளையாடி 76 புள்ளிகளுடன் 2 ஆவது இடத்தில் உள்ளது.

இன்னும் 3 லீக் போட்டிகள் எஞ்சி இருக்கும் நிலையில் ரியல் மெட்ரிட் தங்களது அடுத்த போட்டியில் நாளை கிரானடா அணியை சந்திக்கிறது. இந்தப் போட்டியில் ரியல் மெட்ரிட் அணி வெற்றிபெற்று பார்சிலோனா தனது எஞ்சிய 3 போட்டிகளில் ஏதாவது ஒன்றில் வெற்றிபெறாமல் போனால்கூட ரியல் மெட்ரிட் சம்பியன் மகுடத்தை தனதாக்கிவிடும்.

# சீத்துவக்கேடு 19



காரைக்கவி
கந்தையா பத்மானந்தன்



இந்த சிறுதானிய காலத்தில வீசுகிற வாடைக்காத்து மெல்ல மெல்ல மாறி வைகாசியில சோளகக் காத்தாக கொஞ்சம் வேகமா வீசத் தொடங்கும். வாடைக் காத்தெண்டது வடக்குப் பக்கம் இருந்து தெற்குப் பக்கமா வீசும். சோளகக் காத்தெண்டது தெற்குப் பக்கமா இருந்து வடக்குப் பக்கமா வீசும்.

இத மாதிரி கிழக்குப் பக்கம் இருந்து வீசுற காத்தை கொண்டல் எண்டும், மேற்குப் பக்கம் இருந்து வீசுற காத்தை கச்சான் எண்டும் ஆக்கள் சொல்லுவினம்.. அதேமாதிரி இன்னும் நாலுவிதமான காத்துகள் வீசும் மோனை.

தென்மேற்கு பக்கத்தில இருந்து காத்து வீசினா அதை சோளகக் கச்சான் எண்டும், தென்கிழக்கில் இருந்து வீசினா அதை சோளகக் கொண்டல் எண்டும், வடமேற்கில் இருந்து வீசினா வாடைக் கச்சான் எண்டும், வடகிழக்கில் இருந்து வீசினா வாடைக் கொண்டல் எண்டும் சொல்லுவம் எண்டு ஆச்சி சொல்லுறவ. தென்றல் எண்டதும் தெற்குப் பக்கத்தில இருந்துதான் வீசும். இது கொஞ்சம் மென்மையான ஒரு காத்து. அப்புவிட்டை என்னணை அப்பு, சோளகமும் தெற்கில இருந்து வீசுது, தென்றலும் தெற்கில இருந்து வீசுது ஒண்டும் விளங்கேல்லை எண்டு கேட்டால், அப்பு சொல்லுவார், அதடா மோனை உந்தப் பொம்பிளையள் மணவறைக்கு தாலி கட்ட முந்தி மெல்ல மெல்ல நோகாம நடந்து வாற மாதிரி மெல்ல வாற காத்து, தென்றல். அதே பொம்பிளை தாலி கட்டி கொஞ்ச நாளைக்குப் பிறகு குசினிக்கை கிடக்கிற சட்டி பானையளை எடுத்தெறிஞ்சு சண்டை பிடிக்கிற மாதிரி கொஞ்சம் வேகமா வாற காத்து, சோளகம். இப்ப உன்ரை கோச்சி சோளகம் மாதிரி எண்டுவார்.

இதைக் கேட்டிட்டு ஆச்சி சொல்லுவா, என்னவாம் கொப்பு சோளகமாமோ தேவையெண்டால் சூறாவளியாவும் இருப்பன் எண்டது தெரியாதாமோ எண்டிட்டு அப்புவைப் பார்த்து இப்ப உங்கட கோத்தை இருந்திருந்தா சொல்லி இருப்பா இந்த சூறாவளிக் கதையை எண்டு. இடிச்சுக் கொண்டிருந்த வெத்திலை உரலை அப்புவை நினைச்சோ இல்லாட்டில் அப்புவின்ரை ஆத்தையை நினைச்சோ தெரியாது ஓங்கி ஒரு இடி இடிப்பா. இஞ்சரும் இடியாததுமா உரலுக்கில கிடக்கிற வெத்திலை பாக்கு உரலுக்கால எழும்பி வெளியில பறந்துபோய் அப்புவுக்கு முன்னால விழ எல்லா வீட்டு அப்புமார் மாதிரி அவரும் கப்சிப் ஆயிடுவார்.

வருசம் முழுக்க உந்த விதம் விதமான காத்துகள் இருந்தா வெக்கை எண்டு ஒண்டு இருக்காது. முந்தி உதாலதான் எங்கட ஆக்கள் ஆல், அரசு, வேம்பு, மருது, இலுப்பைப்புளி, பூவரசு சீமைக் கிளுவை முக்கிளுவை வெக்கிளுவை எண்டு நிறைய மரங்களை கோயில் வீதிவழியை ரோட்டுகளிலை வாய்க்கால் கரையளிலை வயல் சாடுவாயளிலை வீட்டு வேலிவழியை நட்டு வைச்சவை.

உந்த மரங்கள் லேசில வெய்யிலுக்கு வாடாது, இலை கொட்டாது, நல்ல காத்தில ஈரப்பதனை வைச்சிருக்கும் எண்டு அப்பு சொல்லுவார். விஞ்ஞானம் படிச்சவை உந்த மரங்கள் நிறைய காபனீரொட்சைட்டை எடுத்து ஒட்சிசனை விடும், அதால காத்து நல்லா துப்பரவா இருக்கும் எண்டு சொல்லுவினம்.

எங்கட ஆக்கள் முந்தி உந்த மரங்களை மதிச்சது கூட. ஆல், அரசு, வேப்ப மரங்களை கும்பிட்டதும் அல்லாமல் மரங்களுக்கு மதிப்புக் குடுக்க வேணும் எண்டுக்காக எங்கட ஊரில கன குறிச்சியளுக்கு மரங்களின்ரை பெயரோட அடி எண்ட சொல்லை சேர்த்து வைச்சு பெயர்கள் வைச்சவை. உதாரணமா வேம்படி, ஆலடி, ஆலங்கண்டடி, சின்னாலடி, மருதடி, அரசடி, சந்தம்புளியடி, இலகடி, இலந்தைச் சாலை, தேக்கடி, இலுப்பையடி எண்டே சொல்லிக் கொண்டு போகலாம்.

இந்த சிறுதானிய காலத்தில் கிளியளுக்கு காவல் இருக்கிற எங்கட இன்னொரு பொழுதுபோக்கு பட்டம் விடுறது. வயது வித்தியாசம் இல்லாமல் பெடி பெட்டையள் எல்லாம் பட்டம் விடுவம். கொக்குப் பட்டம், பிராந்துப் பட்டம், பெட்டிப் பட்டம், எட்டு மூலைப் பட்டம் எண்டு விதம் விதமா பட்டங்கள் செய்துவிடுவம்.

தென்னம் ஈர்க்கும் பழைய சீமேந்து பாக் பேப்பரும் இல்லாட்டில் நியூஸ் பேப்பரும் பாவிச்சு பட்டம் செய்வம். சிலர் கலர் கலரா ரிசூப் பேப்பர் இல்லாட்டில் வாணிசுப் பேப்பர் பாவிப்பினம். உந்தப் பட்டங்களை ஏத்தி கொட்டில் காலிலை கட்டி விடுவ.

என்னதான் பட்டம் எண்டாலும் அது எப்பிடி வண்ணமா வடிவா இருந்தாலும் காத்து இருந்தாலும் வால் இல்லாட்டில் பறக்காது. ஆச்சியின்ரை பழஞ்சீலை இல்லாட்டில் அப்புவின்ரை பழைய வேட்டிக் கரையை கிழிச்சு வால் கட்டுவம். வாலில்லாத பட்டம் எண்டது சில ஆக்கள் படிச்சு வாங்கி வைச்சிருக்கிற ஒருத்தருக்கும் பிரயோசனமில்லாத பட்டங்கள் மாதிரி...

நாங்கள் உந்த கஷ்ரப்பட்டு படிச்சு பட்டம் வாங்கிற ஆக்கள் மாதிரி கஷ்ரப்பட்டு பட்டம் செய்வம். சிலர் உந்த படிக்காம காசு குடுத்து பட்டம் வாங்கிறவை மாதிரி கடையில விக்கிற பட்டம் வாங்கி விடுவினம். எண்டாலும் நாங்களாவே செய்து பட்டம் விடுகிற எங்களுக்கு நாங்கள் செய்த பட்டத்தை நாங்கள் விடுகிறம் எண்ட ஒரு கெப்பர் இருக்கும். ஆனால், காசுக்கு வாங்கி விடுகிறவையளுக்கு உந்தக் கெப்பர் இருக்காது.

நூல் ஒவ்வொருத்தரும் ஒவ்வொருவிதமா ரெண்டு இழை நூல், மூண்டு இழை நூல், நாலு இழை நூல் எண்டு நைலோன் நூல் பாவிப்பினம். பட்டத்தின்ரை சைசுக்கு ஏற்ற மாதிரி நூலின்ரை இழை மாறுபடும். பெரிய பட்டம் எண்டால் கொஞ்சம் கூடின இழையுள்ள நூலைப் பாவிப்பினம். இதிலையும் சில பெடியள் இழை கூடின நூலைப் பாவிக்கிறது என்னமோ பெரிய பெருமை எண்டு நினைச்சு சின்னப் பட்டங்களுக்கும் இழை கூடின நூலை வாங்கிப் பாவிச்சுப் போட்டு பட்டம் ஏன் ஏறுதில்லை எண்டு மண்டையைப் பிச்சுக் கொண்டு நிப்பாங்கள்.

இதைக் கண்டால் அப்பு தான் போக வழியைக் காணமாம் மூஞ்சூறு விளக்கு மாத்தையும் கொண்டு போச்சாம் எண்ட மாதிரி பட்டத்தின்ரை சைசுக்கு ஏத்த மாதிரி எல்லோடா பெடியள் நூல் இருக்க வேணும். என்னத்துக்கு அளவுக்கு மிஞ்சி ஆசைப்படுவான் நூலை மாத்தி ஏத்துங்கோடா எண்டு பேசுவார்.

**(தொடரும்)**

# அதிர்ச்சியூட்டும் யானைகளின் மர்ம மரணம்





தென்னாபிரிக்காவின் போட்ஸ்வானாவிலுள்ள ஒகவாங்கோ பகுதி. ஆறாயிரம் சதுர கிலோ மீற்றருக்கும் மேல் பரப்பளவு கொண்ட இந்தப் பாதுகாக்கப்பட்ட பகுதியை, கடந்த மே மாதத்தில் ஒரு நாள் பகற்பொழுதில் பல்லுயிரினப் பாதுகாவலர்கள் விமானத்தில் பறந்து கண்காணித்துக்கொண்டிருந்தனர். அப்போது அந்த வனப் பகுதிக்குள் பல இடங்களில் அதுவரை இல்லாத வகையில் கறுப்பு நிறத்தில் வித்தியாசமாக பாறைத் திட்டுகள்போல் இருந்தது கண்டு தாழ்வாகப் பறந்துசென்று பார்வையிட்டனர். அப்போதுதான் தெரிந்தது அது பாறைகள் அல்ல இறந்துகிடக்கும் யானைகள் என்று.

அதிர்ச்சியடைந்த அவர்கள், அந்த டெல்டா பகுதி முழுவதும் மூன்று மணிநேரம் விமானத்தில் பறந்து ஆய்வுசெய்ததில் 169 யானைகள் இறந்து கிடந்ததைக் கண்டு திகைத்தனர். இறப்புக்கான காரணம் என்னவென்று ஆராய்வதற்குள் அடுத்தடுத்து (ஜுன் மாதத்துக்குள்) மொத்தம் 350இற்கும் மேற்பட்ட யானைகள் உயிரிழந்ததால் அந்நாட்டு அரசு பேரதிர்ச்சியடைந்தது.

இறந்து கிடந்த யானைகளின் தந்தங்கள் வெட்டியெடுக்கப்படாமல் இருந்ததால் அவை வேட்டையாடப்படவில்லை என்பது முதல் கட்டமாக உறுதிசெய்யப்பட்டது. இருந்தாலும், பெரும்பாலான யானைகள் குட்டைகளுக்கு அருகிலேயே இறந்துகிடந்ததால் அந்த நீரில் விஷம் கலந்திருக்கலாம் என்ற சந்தேகம் ஏற்பட்டது.

ஆனால், மற்ற விலங்குகள் எதுவும் இறக்காத நிலையில், யானைகள் மட்டுமே இறந்துகிடந்ததும், இறந்த யானைகளின் உடல்களை பிற ஊன் உண்ணிகள் உண்ணாததும், யானைகள் இறந்துகிடந்த முறையும் மர்மமாக இருந்தன.

பொதுவாக, யானைகள் இறந்தால் உடல் கீழே ஒரு பக்கமாக சாய்ந்து விழுந்துவிடும். ஆனால், இங்கு இறந்து கிடந்த பெரும்பாலான யானைகள் தலையைத் தரையில் முட்டிப்படுத்து விசித்திரமான முறையில் இறந்துகிடந்துள்ளன. இறப்பதற்கு முன் தள்ளாடியபடி வட்ட வடிவில் சுற்றிசுற்றி வந்துள்ளன. இதனால் ஏதாவது தீநுண்மி (வைரஸ்) தாக்கி, மூளை, நரம்பு மண்டலம் பாதிக்கப்பட்டு யானைகள் இறந்திருக்கலாம் என சில ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

சம்பவம் நடந்துள்ள ஒகவாங்கோ டெல்டா பகுதியில், யானைகள், ஆபிரிக்கக் காட்டெருமைகள், சிறுத்தை, காண்டாமிருகம், கழுதைப்புலி, வரிக்குதிரை உட்பட ஏராளமான பாலூட்டி வகை விலங்குகள், அரிய வகைப் பறவை இனங்கள் வசிக்கின்றன. அப்படியே தீநுண்மி தாக்கி யானைகள் இறந்திருந்தாலும் இந்தப் பகுதியில் வசிக்கும் மற்ற விலங்குகளும் தீநுண்மி தாக்கி இறந்திருக்க வேண்டும். ஆனால், யானைகள் மட்டுமே இறந்துவிட, மற்ற விலங்குள் எவ்வித பாதிப்புக்கும் உள்ளாகாமல் இருப்பதால், யானைகளின் இறப்புக்கான மர்மம் புரியாத புதிராகவே உள்ளது.

போட்ஸ்வானாவில் மட்டும் 1.18 இலட்சம் யானைகள் இருப்பதாகவும், சந்தேக மரணம் நிகழ்ந்த ஒகவாங்கோ டெல்டா பகுதியில் மட்டும் சுமார் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட யானைகள் வசிப்பதாகவும் புள்ளிவிவரங்கள் கூறுகின்றன.

> **"ஒரேநேரத்தில் நூற்றுக்கணக்கான யானைகள் மர்மமான முறையில் இறந்ததுள்ளது பேரழிவாகக் கருதப்படும் நிலையில், இறப்புக்கான மர்ம முடிச்சு அவிழ்வதற்கு முன்பாக இது பொது சுகாதாரப் பிரச்சினையாக மாறிவிடக்கூடாது என்ற கவலையும் அந்நாட்டு அரசுக்கு ஏற்பட் டுள்ளது."**

இந்த நிலையில்தான் 350இற்கும் மேற்பட்ட யானைகளின் மர்ம மரணம் நாட்டு மக்களுக்கும் வன விலங்கு ஆர்வலர்களுக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. "வறட்சி ஏற்படாமல் ஒரேசமயத்தில் இத்தனை யானைகள் திடீரென உயிரிழந்திருப்பது இதற்கு முன்பு உலகில் எங்கும் கண்டிராதது" என்கிறார் பிரிட்டனிலுள்ள நேஷ னல் பார்க் ரெஸ்யூம் விலங்குகள் நல அமைப்பைச் சேர்ந்த டாக்டர் நியால் மெக்கேன்.

"வேட்டையாடுபவர்கள் அதற்கான உணவுடன் சயனைடை கலந்து வைத்திருந்தால் அதை உண்ட யானைகள் மட்டுமல்லாது, பிற உயிர்களும் இறந்திருக்கும். ஆனால், இந்தப் பகுதியில் யானைகள் மட்டுமே உயிரிழந்திருக்கின்றன. கடந்த ஆண்டில் இயற்கையாகப் பரவிய ஆந்த்ராக்ஸ் கிருமியால் நூற்றுக்கும் மேற்பட்ட யானைகள் உயிரிழந்தன. ஆனால், இப்போது அதற்கும் அதிக வாய்ப்பில்லை. யானைகளின் இறப்பு முறையை வைத்துப் பார்க்கும்போது அந்த யானைகளின் நரம்புமண்டலங்களை ஏதோ தாக்கியுள்ளதாகத் தெரிகிறது. யானைகளைத் தாக்கிய இத்தகைய நோய் நீர், மண் வழியாக மனிதர்களுக்கும் பரவும் என்பதையும் மறுக்க முடியாது" என்கிறார் டொக்டர் நியால் மெக்கேன். இதில் குறிப்பாக, 'கொவிட் –19' நோய்த்தொற்று விலங்குகளிடையேயும் பரவிவருவதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

யானைகள் உயிரிழந்ததற்கான காரணத்தை அறிவதற்காக இறந்த யானைகளின் உடல்கள் உடற்கூராய்வு செய்யப்பட்டு அதன் உள்ளுறுப்பு மாதிரிகள் சேகரிக்கப்பட்டு தென்னாபிரிக்கா, சிம்பாப்வே, கனடா ஆகிய நாடுகளிலுள்ள ஆய்வுக் கூடங்களுக்குப் பரிசோதனைக்காக அனுப்பப்பட்டுள்ளன. "சோதனை முடிவுகள் ஜுலை மாத நடுவில் வரலாம். அதன்பிறகே யானைகளின் இறப்புக்கான காரணம் தெரியும்" என்கிறார் போட்ஸ்வானா தேசியப் பூங்காவின் துணை பணிப்பாளர் சிரில் டாலோ.

ஒரேநேரத்தில் நூற்றுக்கணக்கான யானைகள் மர்மமான முறையில் இறந்ததுள்ளது பேரழிவாகக் கருதப்படும் நிலையில், இறப்புக்கான மர்ம முடிச்சு அவிழ்வதற்கு முன்பாக இது பொது சுகாதாரப் பிரச்சினையாக மாறிவிடக்கூடாது என்ற கவலையும் அந்நாட்டு அரசுக்கு ஏற்பட் டுள்ளது.

ஒகவாங்கோ டெல்டா, போட்ஸ்வானாவின் மிகவும் பிரபலமான சுற்றுலாத்தலம். இங்குள்ள வனவிலங்குகளைக் காண்பதற்காக ஆண்டு முழுவதும் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர் . இங்கு யானைகளின் மரணம் தொடர்ந்தால் சுற்றுலாவும், அதனால் கிடைக்கும் மிகப்பெரிய வருவாயும் முடங்கும் நிலை ஏற்படும். எனவை, யானைகளின் இறப்புக்கான காரணத்தை விரைவில் கண்டுபிடித்து மற்ற யானைகளையாவது காப்பாற்ற வேண்டும் என்று வன விலங்கு ஆர்வலர்கள் குரல் கொடுத்துவருகின்றனர்.

***நன்றி -இணையம்***

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7